# ஈரோடு மாநகராட்சி

## மாமன்ற அவசரக் கூட்ட நடவடிக்கைகள்

## (திருவள்ளுவராண்டு 2042 தைத் திங்கள் 26–ஆம் நாள்)

2012–ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 9–ஆம் தேதி (09.02.2012) வியாழக்கிழமை காலை 11.00 மணிக்கு மாமன்ற கூட்ட அரங்கில் நடைபெற்ற மாமன்ற அவசரக் கூட்ட நடவடிக்கைகள்.

– – –

## நடவடிக்கைகள்

**வணக்கத்திற்குரிய மேயர் மற்றும் துணை மேயர் அவர்களால் கொண்டு வரப்பட்ட தீர்மானங்கள்**

1. **தானே புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணப் பணிகளை விரைந்து நிறைவேற்றி வரும் மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களுக்கு இம்மாமன்றம் தனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது.**

2. **ஈரோடு மாநகராட்சி வளர்ச்சிப் பணிகளுக்கு ரூ.15.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்த மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களுக்கு இம்மாமன்றம் தனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது.**

277. **வணக்கத்துக்குரிய மேயரால் முன்மொழிய மரியாதைக்குரிய துணைமேயரால் வழிமொழிய தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.**

## 27.12.2011ம் தேதிய அவசரக் கூட்டத்தில் ஒத்திவைக்கப்பட்ட பொருள்

**1. 3.** ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட பகுதி 2,3,4,5 மற்றும் வீரப்பன்சத்திரம் பகுதி அடங்கிய சிப்பம்-||க்கு பாதாள சாக்கடைத் திட்டம் அமைக்க ரூ.54.75 கோடிக்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு 19.01.11ல் நான்காம் அழைப்பில் ஒப்பந்தம் கோரியதில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் விபரம் வருமாறு.

1. M/s.Vishwa Infra structure and services Ltd., Hyderabad.
2. M/s. UEM India Pvt Ltd., Noida.
3. M/s.Ramkey Infrastructure Ltd – Abiram Infra Projects Pvt Ltd., JV Hyderabad.
4. M/s.RAUS construction Pvt Ltd., V.Ramarao-JV, Hyderabad.
5. M/s. Tebarali Industries & Project Pvt Ltd.,-Aster Pvt Ltd., Hyderabad.

மேற்கண்டவாறு பெறப்பட்ட ஐந்து ஒப்பந்தப்புள்ளிகளின் தொழில்நுட்ப தகுதியை பரிசீலனை செய்து தக்க ஒப்புதல் பெற நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அலுவலக தொழில் நுட்ப நிலைக்குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டதில் மேற்கண்ட ஐந்து ஒப்பந்தப்புள்ளிகளின் தொழில்நுட்ப தகுதிகளை 15.2.11ல் பரிசீலித்து கீழ்கண்ட நான்கு ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புதல் வழங்கியுள்ளது. அதன்படி கீழ்கண்டுள்ள நிறுவனங்கள் அளித்துள்ள விலை விகிதம் பின்வருமாறு.

| வ.எண் | பெயர் | அளித்துள்ள விலை விகிதம் ரூ. | மதிப்பீட்டை விட அதிகம் |
|---|---|---|---|
| L- 1 | M/s.Vishwa Infra structure and services Ltd., Hyderabad | 520016919.53 | (+) 13.09% |
| L- 2 | M/s.RAUS construction Pvt Ltd., V.Ramarao-JV, Hyderabad | 529342624.37 | (+) 15.12% |
| L- 3 | M/s.Ramkey Infrastructure Ltd – Abiram Infra Projects Pvt Ltd., JV Hyderabad. | 665274305.36 | (+) 44.68% |
| L- 4 | UEM India Pvt Ltd., Noida. | 1355607901.00 | (+) 194.82% |

மேற்கண்ட ஒப்பந்தபுள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திருவாளர் விஸ்வா இன்பரா ஸ்ரக்சர் பி.லிட்., ஹைதராபாத் நிறுவனத்தார் அளித்திருந்த வங்கி உத்திரவாதம் 16.10.11ல் முடிவடைவதாலும் 15.9.11-ல் நிறுவனத்தாரிடம் அவர் அளித்த விலை விகிதத்திற்கு கால நீட்டிப்பும் வங்கி உத்திரவாதத்திற்கு கால நீட்டிப்பும் கோரியதில் அன்னார் தனது 2.9.2011ம் தேதிய கடிதத்தில் நாங்கள் அளித்த விலை விகிதங்களை கால நீட்டிப்பு செய்ய இயலாது எனவும் இதற்காக அளித்த வங்கி உத்திரவாதத்தை திரும்ப வழங்கவேண்டுமென்று தெரிவித்து விட்டதால் இதற்கடுத்த நிலையில் உள்ள திருவாளர் ஆர்.ஏ.யு.எஸ்.கன்ஸ்ட்ரக்ஷன் - வி.ராமாராவ், ஹைதராபாத் நிறுவனத்தாரிடம் இப்பணிக்கு எல்-1 வழங்கிய விலை விகிதத்திற்கு மேற்கண்ட பணியை செய்ய இயலுமா என்று கேட்கப்பட்டது. அன்னார் தனது 14.10.11 தேதிய கடிதத்தில் இப்பணியை எல்-1 விலை விகிதம் (+)13.09% தொகைக்கே செய்து தர சம்மதித்துள்ளார். எனவே இதன் மீது முடிவு செய்ய மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:-

1) மேற்கண்ட பணி திட்டப்பணியாக இருப்பதாலும், உரிய காலத்தில் பணிமுடிக்க வேண்டியிருப்பதாலும் L1 ஒப்பந்ததாரர் ஒப்பந்தப்புள்ளி செல்லுபடி காலம் 16.10.2011 உடன் முடிவடைந்து விட்டதாலும், L1 ஒப்பந்ததாரர் வழங்கிய விலை விகிதத்தின்படி (+13.09%) L2 ஒப்பந்ததாரர் M/s.RAUS Construction Pvt Ltd., - Ramarao-JV, Hyderabad அவர்கள் செய்து கொடுக்க சம்மதம் தெரிவித்திருப்பதால் இதனை மாமன்றம் ஏற்கலாம். மேலும் நகராட்சி நிர்வாக ஆணையரக ஒப்பந்தப்புள்ளி நிலைக்குழுவின் ஒப்புதல் பெறவும் மாமன்றம் அனுமதிக்கலாம்.

2) இத்திட்டத்திற்கு அனுமதிக்கப்பட்ட தொகைக்கு மேல் கூடுதலாகும் தொகையினை அரசு மான்யம், நிதி நிறுவன கடன் பெறவும் அல்லது மாநகராட்சி நிதியிலிருந்து ஈடு செய்து கொள்ளவும் மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

**பா.சா.தி/7587/10**

**278. அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. 27வது வார்டு மாமன்ற உறுப்பினர் திருமதி.இராதாமணிபாரதி, மற்றும் 54வது வார்டு மாமன்ற உறுப்பினர் திருமதி.ஜா.சபுராமாமின்ஹாஜ் ஆகியோர் ஆட்சேபனை செய்தனர்.**

**2.** இம்மாமன்ற 02.09.11 தேதிய 359ஆம் எண் தீர்மானம் ஒப்புதல் பெற்றுள்ள ஜெய்நகர்-3வது வீதிக்கு ரூ.2.15 இலட்சம் மதிப்பீட்டில் பிளாஸ்டிக் கழிவுகளை உபயோகப்படுத்தி தார் சாலை அமைக்கும் பணிக்கு 22.12.2011 அன்று ஈ-டெண்டரிங் மூலம் முதல் முறையாக வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை மதிப்பீட்டு விலைவிகிதத்துடன் ஒப்புநோக்கும் பொழுது பெறப்பட்ட விபரம் கீழ்கண்டவாறு-

| | |
|---|---|
| 1. திருவாளர்கள் கோல்டன் கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் | (+) 4.96 % மதிப்பீட்டை விட அதிகம் |
| 2. கே. அமுதா | (+) 4.91 % மதிப்பீட்டை விட அதிகம் |

மேற்படி இரண்டு ஒப்பந்ததாரர்கள் 1 சதவீதம் டேவணித் தொகையாக வங்கி நிரந்தர வைப்புத் தொகை பத்திரமாக செலுத்தியுள்ளார்கள்.

எனவே வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவானதாகவும், மதிப்பீட்டை விட (+) 4.91% அதிகமான விலைவிகிதம் கொடுத்துள்ள கே. அமுதா ஒப்பந்ததாரருக்கு மேலும் விலையை குறைத்துக் கொடுக்க இயலுமா என இவ்வலுவலக ம.எண்.118-2011-12 இ1-7760-2011, நாள் 22.12.2011ம் தேதியில் அறிவிப்பு கொடுக்கப்பட்டது. ஒப்பந்ததாரர் தனது 23.12.2011 தேதிய கடிதத்தில் ஒப்பந்தப்புள்ளி படிவ இனம் எண்.1,2 மற்றும் 3 ஆகிய இனங்களுக்கு ஏற்கனவே ஒப்பந்தப்புள்ளியில் கொடுத்துள்ள விலையை விட குறைத்து கொடுத்துள்ளார். அவ்வாறு குறைத்து கொடுத்த விலையைக் கொண்டு மதிப்பீட்டு விலைவிகிதத்துடன் ஒப்புநோக்கும் பொழுது மதிப்பீட்டை விட (-) 0.10 சதவீதம் குறைவான விலைவிகிதம் வரப்பெற்றுள்ளது. எனவே வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட (-) 0.10 சதவீதம் குறைவான விலைவிகிதம் அளித்துள்ள கே. அமுதா அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு-

1. மேற்கண்ட பணிக்கு முதல் முறையாக வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட (-) 0.10சதவீதம் குறைவான விலைவிகிதம் கொடுத்துள்ள கே. அமுதா ஒப்பந்ததாரர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளிக்கு மாமன்றம் அனுமதி வழங்கலாம்.
2. இப்பணி திட்டப்பணியாக உள்ளதால் மேற்கண்டவாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிக்கு மாமன்ற அனுமதி எதிர்நோக்கி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன்அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்க நடவடிக்கை எடுத்தமைக்கும் அனுமதி வழங்கலாம்.

**இ1-7760-11**

**279. அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

**3.** ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட மண்டலம்-2ல் சுகாதாரப் பிரிவில் 38 எண்ணம் டம்பர் பிளேசர் தொட்டிகள் (Dumper Placer Bins) பழுதடைந்து பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளது. இதனால் அன்றன்று உற்பத்தியாகும் திடக்கழிவுகளை (Solid Waste) முறையாக சேகரித்து அப்புறப்படுத்த முடியாமல் பொது சுகாதாரம் பாதிக்கும் சூழ்நிலை உள்ளது.

மேற்கண்ட 38 எண்ணம் தொட்டிகளையும் பழுது பார்க்கும் பணிக்கு தயார் செய்யப்பட்டுள்ள உத்தேச மதிப்பீடு ரூ.3.25 இலட்சத்திற்கு அனுமதி வேண்டப்படுகிறது.

இப்பணி மிகவும் அத்தியாவசிய பணியாக இருப்பதால், பணியின் அவசர அவசியத்தை கருத்தில் கொண்டு மாமன்றத்தின் ஒப்புதலை எதிர்நோக்கி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று குறுகிய கால ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை எடுக்க அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு-

மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி, மாமன்ற அனுமதியை எதிர்நோக்கி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி மேல் நடவடிக்கை எடுத்தமைக்கும் மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**(இ2-10910-12)**

**280. அலுவலகக்குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**4.** வருவாய் கோட்ட அலுவலர், ஈரோடு அவர்களின் கடிதம் ந.க.எண். 2972-2011-ஆ3 நாள் 04.01.2012ல் இணைத்துள்ள மாநில முதியோர் உதவித் தொகை பயனாளிகளை தேசிய முதியோர் உதவித் திட்டத்தின் கீழ், வறுமைகோட்டிற்கு கீழ் உள்ள 2101 நபர்களுக்கு பிபிஎல் பட்டியல் எண் வழங்குமாறு கோரியுள்ளார்கள். ஏற்கனவே ஆணையர் அவர்களின் 3.1.2012ம் தேதிய கடிதத்தில் மேற்கண்ட 2101 நபர்களில் ஈரோடு மாநகராட்சி ஒருங்கிணைக்கப்பட்ட பகுதிகளில் உள்ள பட்டிய்லில் இருந்து 108 பயனாளிகளுக்கு பிபிஎல் பட்டியல் எண் வழங்கப்பட்டுள்ளது. ஆகவே மீதமுள்ள 1993 பயனாளிகளுக்கு பிபிஎல் பட்டியல் எண் கொடுக்கப்பட வேண்டியிருப்பதால் அவசர அவசியத்தை முன்னிட்டு மாமன்றத்தின் அனுமதியை

எதிர்நோக்கி, வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று பிபிஎல் பட்டியல் எண் வழங்கியதற்கு அனுமதி கோரப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு-

வருவாய் கோட்ட அலுவலர் அவர்கள் கோரியுள்ள 1993 பயனாளிகளுக்கு முதியோர் உதவித் தொகை வழங்குவதற்கு அவசர அவசியம் கருதி மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று பிபிஎல் பட்டியல் எண் வழங்கியதற்கு மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

**இ5-11948-11**

**281. அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

**5.** ஓய்வூதியதாரர்கள் / குடும்ப ஓய்வூதியதாரர்கள் திருமணமான/விதவை/ விவாகரத்தான மகள் ஆகியோருக்கு அவர்கள் 25 வயதைக் கடந்த பிறகும் குடும்ப ஓய்வூதியம் வழங்குவது குறித்து கீழ்க்காணும் நிபந்தனைகளுக்குட்பட்டு அரசு ஆணை எண்.325 நிதித்(ஓய்வூதியம்)துறை நாள் 28.11.2011ல் வெளியிடப்பட்டுள்ளது.

1) ஓய்வூதியர்கள் / குடும்ப ஓய்வூதியர்களின் 25 வயதிற்கு மேற்பட்ட திருமணமாகாத மகள்களும் / விதவை / விவாகரத்தான மகள்களும் அவர்கள் வாழ்நாள் முழுமைக்கும் குடும்ப ஓய்வூதியம் பெற தகுதியுடையவர்கள்.
2) ஒரு குடும்பத்தில் 25 வயதிற்குக் குறைவான, குடும்ப ஓய்வூதியம் பெற தகுதியுடைய குழந்தைகள், அவர்கள் குடும்ப ஓய்வூதியம் பெறுவதற்கான தகுதிக்காலம் முடிந்த பின்னரோ, மேலும் அக்குடும்பத்தில் வேறு மாற்றுத்திறன் படைத்த குழந்தைகள் இல்லாவிடில் மட்டுமே, 25 வயதிற்கு மேற்பட்ட திருமணமாகாத / விதவையான / விவாகரத்தான மகள்கள் வாழ்நாள் குடும்ப ஓய்வூதியத்தை பெறத்தகுதி பெறுவர்.
3) இத்தகைய 25 வயதிற்கு மேற்பட்ட திருமணமாகாத மகள்கள் மற்றும் விதவை / விவாகரத்தான மகள்கள், திருமணமோ / மறுமணமோ புரிந்தபின் அவர்களின் குடும்ப ஓய்வூதியம் அத்திருமணத்திற்கு பின் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும். இதனை உறுதி செய்யும் பொருட்டு மேற்கூறிய ஓய்வூதியதாரர்கள் ஒவ்வொரு வருடமும் அவர்கள் மணம் / மறுமணம் புரியாமை சான்றிதழ் ஓய்வூதியம் வழங்கும் அலுவலரிடம் வழங்க வேண்டும்.
4) 25 வயதிற்கு மேற்பட்ட திருமணமாகாத / விதவை / விவாகரத்தான மகள்களில் அவர்களின் வயதின் அடிப்படையில் மூத்தவருக்கு முதலில் வாழ்நாள் குடும்ப ஓய்வூதியம் வழங்கப்பட வேண்டும். மூத்தவர் மறுமணம் புரிந்தாலோ / இறக்க நேரிட்டால் மட்டுமே அடுத்த இளைய மகள் குடும்ப ஓய்வூதியம் பெற தகுதியுடையவராவார்.
5) திருமணமாகாத மகள்கள் / விதவை / விவாகரத்தான மகள்களின் மாத வருமானம் ரூ.2550/-க்கு மிகாமல் இருக்க வேண்டும். இது தொடர்பாக வருமானச் சான்றிதழை ஆண்டுதோறும் ஓய்வூதியம் வழங்கும் அலுவலரிடம் சமர்ப்பிக்க வேண்டும்.

மேலும் இந்த அரசாணை, வெளியிடப்படும் நாளிலிருந்து நடைமுறைக்கு வருவதாக இதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்காணும் அரசாணை மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு-

மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**பி3-11112-09**

**282. பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.**

**6.** இம்மாநகராட்சி அலுவலகத்தில் பழுதுபட்டுள்ள பிரிண்டர்கள், கணினிகள் மற்றும் அலுவலக கணினிகளுக்கான Local area net wiring சரி செய்தல் பணிக்கு இம்மாமன்றம் தனது 21.12.2011ம் தேதிய தீர்மானம் எண்.96ல் உத்தேச செலவினம் ரூ.65,000-க்கு அனுமதி வழங்கியுள்ளது. அதன்படி மேற்படி பணிக்கு 10.01.2012ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் விவரம் பின்வருமாறு-

| வ. எண். | ஒப்பந்ததாரரின் பெயர் | மொத்த செலவினம் ரூ. |
|---|---|---|
| 1. | மெசர்ஸ் சிக்மா கம்ப்யூட்டர் லிங்க்ஸ், ஈரோடு | 62,750- |
| 2. | யூனிவாக் டெக்னாலஜி, ஈரோடு | 64,263- |

இரு ஒப்பந்ததார்களும் ஒப்பந்தப்புள்ளி வைப்புத் தொகையினை மாநகராட்சிக் கருவூலத்தில் செலுத்தியுள்ளனர். வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

அலுவலகக் குறிப்பு-

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாக ரூ.62,750-க்கு கொடுத்துள்ள மெசர்ஸ் சிக்மா கம்ப்யூட்டர் லிங்க்ஸ், ஈரோடு நிறுவனத்தாரின் குறைந்த விலைவிகித ஒப்பந்தப்புள்ளி உள்ளூர் சந்தை நிலவரத்திற்கு ஏற்புடையதாக இருப்பதாலும், கணினி வரி வசூல் மையங்களில் உள்ள பிரிண்டர் பழுதுகளை சரி செய்ய வேண்டியதன் அவசர அவசியம் கருதி வணக்கத்திற்குரிய மாமன்ற மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று பிரிண்டர் பழுதுகள் சரி செய்ய அலுவலக நடவடிக்கைகள் மேற்கொண்டமைக்கும் மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**இ3-11432-11**

**283. அலுவலகக்குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**7.** இம்மாநகராட்சிக்குட்பட்ட 4 மண்டலங்களில் உள்ள வரிவசூல் மையங்களுக்கு கணினிகள் மற்றும் பிரிண்டர்கள் வாங்குவதற்கு இம்மாமன்றம் தனது 21.12.2011ஆம் தேதிய 174ல் அனுமதி வழங்கியுள்ளது. தற்பொழுது அலுவலகப் பணிகளின் அவசர அவசியம் கருதி கணினிகள் பத்து எண்ணிக்கைகள் மற்றும் பிரிண்டர்கள் பதிமூன்று (Dot matrix) எண்ணிக்கைகளை அரசு அங்கீகரித்துள்ள Directorate General of Supplies & Disposals விலைவிகிதத்தில் வாங்குவதற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு-

1) மாமன்றம் அனுமதிக்கலாம்.

2) கணினிகள் மற்றும் பிரிண்டர்கள் கணினி வசூல் மையங்களுக்கு தேவைப்படுவதன் அவசர அவசியத்தினைக்கருதி வணக்கத்திற்குரிய மாமன்ற மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று அரசால் அங்கீகரிக்கப்பட்டுள்ள DGS & D விலைவிகிதத்தில் வாங்குவதற்கு அலுவலக நடவடிக்கைகள் மேற்கொண்டமைக்கும் மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**இ3-11511-11**

**284. அலுவலகக்குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**8.** இம்மாநகராட்சியில் சுவர்ண ஜெயந்தி நகர்ப்புற வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் பணிகள் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண். 12919-11-யுபிஏ-3, 16.09.2011-ன்படி 2011-2012ம் ஆண்டிற்கு ரூ.19,53,441-க்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் பணிகளை மேற்கொள்ள வீரப்பன் சத்திரம் சமுதாய வளர்ச்சி சங்கம், பெரியசேமூர் சமுதாய வளர்ச்சி சங்கம், சூரம்பட்டி சமுதாய வளர்ச்சி சங்கம் மற்றும் காசிபாளையம் சமுதாய வளர்ச்சி சங்க உறுப்பினர்களால் நான்கு பணிகள் தேர்வு செய்து தீர்மானிக்கப்பட்டுள்ளதை மாமன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண். | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | மண்டலம்-1 வார்டு எண்.3க்குட்பட்ட வீரபண்ணாடி புதூர் பகுதியில் மழைநீர் வடிகால் கட்டுதல் | 5.00 |
| 2. | மண்டலம்-2 வார்டு எண்.16 தொட்டம்பட்டி பகுதியில் சிமெண்ட் கான்கிரீட் தளம் அமைத்தல். | 5.00 |
| 3. | மண்டலம்-3 வார்டு எண்.41 அசோகபுரி குடிசை பகுதியில் மழைநீர் வடிகால் மற்றும் சிமெண்ட் கான்கிரீட் தளம் அமைத்தல் | 5.00 |
| 4. | மண்டலம்-4 வார்டு எண்.51 கூட்செட் எதிர்புறம் உள்ள குடிசைப்பகுதி மற்றும் இ.எம்.எம். வீதியில் சிமெண்ட் கான்கிரீட் தளம் அமைத்தல். | 5.00 |

மேற்கண்ட பணிக்கு நிதி ஒதுக்கீடு போக மீதமுள்ள தொகை ரூ.46,559-ஐ பொது நிதியிலிருந்து ஈடு செய்து கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு-

1) மாமன்றம் பதிவு செய்யலாம்.
2) நிதி ஒதுக்கீடு போக மீதமுள்ள தொகை ரூ.46,559-ஐ பொது நிதியிலிருந்து ஈடு செய்து கொள்ள மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன்அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மாமன்றம் அனுமதிக்கலாம்.

**இ1-1971-11**

**285. அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

**9**. ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட மண்டலம்-2 பகுதியில் வார்டு எண்.19 காந்திநகர் பகுதியில் ஏற்னகவே அமைக்கப்பட்டுள்ள கல்வெர்ட் மிகவும் தாழ்வாக உள்ளதால் மேலும் அதனுடைய அளவு குறுகியுள்ளதால், குப்பைகளால் அடைக்கப்பட்டு இப்பகுதி பொதுமக்கள் போக்குவரத்திற்கு மிகுந்த சிரமத்திற்குள்ளாகின்றனர். சாக்கடை நீர் போகாமல் கல்வெர்ட் பகுதிக்கு மேல் சென்று கொண்டு இருக்கிறது. எனவே பொதுமக்கள் நலன் கருதி மேற்படி வீதியில் சிறுபாலம் அமைக்க தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ.0.70 இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு-

1) மாமன்றம் அனுமதி வழங்கலாம்.
2) மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மாமன்ற அனுமதியை எதிர்நோக்கி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி மேல் நடவடிக்கை எடுத்தமைக்கும் மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**இ1-1210-11**

**286. அலுவலகக்குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**10**. இம்மாநகராட்சியில் புதிதாக கட்டப்பட்டுள்ள மகப்பேறு மருத்துவமனை மற்றும் சிற்றுந்து நிலைய கட்டிடங்கள் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் 29.11.2011ம் தேதியன்று காணொலிக் காட்சி மூலம் Video Confrencing திறப்புவிழா செய்யப்பட்டது. மேற்படி திறப்பு விழா பணிகளுக்குத் தேவையான பணிகளை மேற்கொள்வதற்கு மேலாண்மை இயக்குநர், எல்காட், சென்னை நிறுவனத்தாரை இவ்வலுவலக 26.11.2011ம் தேதிய கடிதத்தில் கோரியதில் மேற்படி நிறுவனத்தார் மேற்கண்ட திய கட்டிடங்களின் திறப்புவிழா பணிகளுக்குத் தேவையான TNSWAN Line connectivity பணிகளை மேற்கொண்டு அதற்கான கட்டணத் தொகை ரூ. 2,34,686-ஐ வழங்குமாறு தமது 22.12.2011ம் தேதிய கடிதத்தில் கோரியுள்ளார். ஆகவே M/s Electronics Corporation of Tamil Nadu Ltd., Chennai நிறுவனத்தாருக்கு பட்டியல் தொகை ரூ.2,34,686-ஐ வழங்குவதற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு-

மேற்படி புதிய கட்டிடங்களின் திறப்பு விழா Video Conferencing பணிகளுக்கான கட்டணத் தொகையை M/s Electronics Corporation of Tamilnadu Ltd., Chennai நிறுவனத்தாருக்கு செலுத்த வேண்டியதன் அவசர அவசியம் கருதி, மாமன்ற அனுமதியை எதிர்நோக்கி, வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று பட்டியல் தொகையினை வழங்கியதற்கும் மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**இ1-9749-11**

**287. அலுவலகக்குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**11**. ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட மண்டலம்-2ல் சுகாதாரப்பிரிவு டம்பர் பிளேசர் பராமரிப்பு மற்றும் பழுது பார்க்கும் பணிக்கு ரூ.3.25 இலட்சத்திற்கு வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் 02.01.2012 அன்று முன் அனுமதி வழங்கியுள்ளார்கள். மேற்கூறிய பணிக்கு குறுகிய கால ஒப்பந்தப்புள்ளி 13.01.2012 அன்று கோரியதில் கீழ்க்கண்டவாறு ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்றுள்ளது.

1. M/s A.R.K Construction, Erode - Rs. 2,97,970/-

இந்த ஒப்பந்ததாரர் முன்வைப்பு தொகையினை (EMD) செலுத்தியுள்ளார்.

முதல் அழைப்பில் வரப்பெற்ற ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டு விலைவிகிதத்தை விட 7.21 சதவீதம் குறைவாக உள்ளது.

இப்பணியின் அவசர அவசியத்தை கருத்தில் கொண்டு மாமன்றத்தின் ஒப்புதலை எதிர்நோக்கி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று குறைவாக வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிக்கு பணி உத்திரவு வழங்கி நடவடிக்கை மேற்கொண்டமைக்கு மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு-

1) மாமன்றம் அனுமதி வழங்கலாம்.
2) மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி, மாமன்ற அனுமதியை எதிர்நோக்கி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கி நடவடிக்கை மேற்கொண்டமைக்கு மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**எச்2-10910-12**

**288. அலுவலகக்குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**12.** ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட மண்டலம்-1ல் சுகாதாரப்பிரிவு டம்பர் பின்கள் 11 எண்ணிக்கையினை பழுதுபார்க்கும் பணியினை ரூ.1.33 இலட்சம் உத்தேச செலவினத்தில் மேற்கொள்ள 27.12.2011ம் தேதிய மாமன்ற தீர்மான எண்.260ல் அனுமதி வழங்கப்பட்டது. அதனை தொடர்ந்து மேற்கண்ட பணிக்கு 13.01.2012 அன்று குறுகிய கால ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்டவாறு ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்றுள்ளது.

1. M/s A.R.K Construction, Erode - Rs. 1,09,475/-

இந்த ஒப்பந்ததாரர் முன்வைப்பு தொகையினை (EMD) செலுத்தியுள்ளார்.

முதல் அழைப்பில் வரப்பெற்ற ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டு விலைவிகிதத்தை விட 16.27 சதவீதம் குறைவாக உள்ளது.

இப்பணியின் அவசர அவசியத்தை கருத்தில் கொண்டு மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மாமன்ற அனுமதியை எதிர்நோக்கி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கி நடவடிக்கை மேற்கொண்டமைக்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு-

1) மாமன்றம் அனுமதி வழங்கலாம்.
2) மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி, மாமன்ற அனுமதியை எதிர்நோக்கி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கி நடவடிக்கை மேற்கொண்டமைக்கு மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**இ3-11825-11**

**289. அலுவலகக்குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**13.** ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட மண்டல்-2ல் சுகாதாரப்பிரிவு வாகனம் எண். டி.என்.33 ஏ.எச் 3341க்கு தகுதிச்சான்று அனுமதி பெற வாகனத்தில் உள்ள பராமரிப்பு மற்றும் பழுது பார்க்கும் பணிக்கு ரூ. 36,000-ற்கும் இவ்வாகனத்தின்

மின்கலப்பெட்டி பழுதடைந்து விட்டதால் புதியதாக மின்கலப்பெட்டி வாங்கி பொருத்துவதற்கும் அதற்குரிய செலவினத் தொகை ரூ. 9,900-க்கும் மாமன்றம் தனது தீர்மான எண்.161 நாள் 21.12.2011 அனுமதி வழங்கியுள்ளது. மேற்கூறிய பணிக்கு குறுகிய கால ஒப்பந்தப்புள்ளி 13.01.2012 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

1. மெசர்ஸ் காயத்திரி மணிமேகலை ஆட்டோ ஒர்க்ஸ், ஈரோடு ரூ.44,675-
2. மெசர்ஸ் ஈஸ்வரன் ஆட்டோ ஒர்க்ஸ், ஈரோடு ரூ.45,650-

இரு ஒப்பந்ததாரர்களும் முன்வைப்பு தொகை (EMD) செலுத்தியுள்ளார்கள். வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மெசர்ஸ் காயத்திரி மணிமேகலை ஆட்டோ, ஒர்க்ஸ், ஈரோடு அவர்கள் குறைவான ஒப்பந்தப்புள்ளி ரூ.44,675-க்கு வழங்கியுள்ளார்கள்.

இப்பணியின் அவசர அவசியத்தை கருத்தில் கொண்டு மாமன்றத்தின் ஒப்புதலை எதிர்நோக்கி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கி மேல்நடவடிக்கை எடுத்தமைக்கு மாமன்ற ஒப்புதல் வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு-

1) மாமன்றம் அனுமதி வழங்கலாம்.
2) மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி, மாமன்ற அனுமதியை எதிர்நோக்கி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கி நடவடிக்கை மேற்கொண்டமைக்கு மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**எச்2-11509-11**

**290. அலுவலகக்குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**14.** ஈரோடு மாநகராட்சிக்கு உட்பட்ட மண்டலம்-2ல் பொது சுகாதாரப் பிரிவில் இயங்கி வரும் டம்பர் பிளேசர் வாகனம் எண். டி.என்.33 ஏ எப் 4394 வாகனத்தில் உள்ள பேட்டரி புதியதாக பொருத்தி கொடுக்க குறுகிய கால ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் 30.12.2011 அன்று வரப்பெற்றது.

| வ. எண். | நிறுவனத்தின் பெயர் | ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிட்டுள்ள தொகை |
|---|---|---|
| 1. | ஸ்ரீ பாலாஜி ஆட்டோ சர்வீஸ்,<br>156 விவேகானந்தா சாலை,<br>நசியனூர் மெயின் ரோடு, ஈரோடு-11 | ரூ.6900-<br>(ரூபாய் ஆறாயிரத்து தொள்ளாயிரம் மட்டும்) |
| 2. | ஜெயா ஆட்டோ ஒர்க்ஸ்,<br>யு.ஆர்.சி பள்ளி ரோடு, திண்டல், ஈரோடு-12 | ரூ.6600-<br>(ரூபாய் ஆறாயிரத்து அறுநூறு மட்டும்) |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஜெயா ஆட்டோ ஒர்க்ஸ், திண்டல், ஈரோடு அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

இப்பணி மிகவும் அத்தியாவசிய பணியாக இருப்பதால், பணியின் அவசர அவசியத்தை கருத்தில் கொண்டு மாமன்றத்தின் ஒப்புதலை எதிர்நோக்கி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கி நடவடிக்கை எடுக்க அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு-

1) மாமன்றம் அனுமதி வழங்கலாம்.
2) மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி, மாமன்ற அனுமதியை எதிர்நோக்கி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கி மேல் நடவடிக்கை எடுத்தமைக்கும் மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**இ2-11440-11**

**291. அலுவலகக்குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**15.** ஈரோடு மாநகராட்சிக்கு உட்பட்ட மண்டலம்-1ல் பொது சுகாதார உபயோகத்திற்கு பயன்படுத்தப்படும் டோசர் வண்டி எண். டி.என்.33 க்யூ 551ல் வண்டி கியர் பாக்ஸ், கிளட்ச் பிளேட், இன்ஜின் ஆயில் சர்வீஸ் செய்தல், பிரேக் சரி செய்தல் ஆகிய பழுதுகளை சரி செய்வதற்கு உண்டான தோரய செலவினத் தொகை ரூ.15,000-க்கு தனது தீர்மானம் எண்.164 நாள் 21.12.11ல் அனுமதி வழங்கியுள்ளது. அதன்படி மேற்படி பணிக்கு 30.12.2011ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் பின்வரும் இரண்டு நிறுவனங்களின் ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. அவற்றின் விபரம் பின்வருமாறு-

| வ. எண். | நிறுவனத்தின் பெயர் | தொகை ரூ. |
|---|---|---|
| 1. | ஸ்ரீ பாக்யலட்சுமி மோட்டார் ஒர்க்ஸ், ஈரோடு | 15,000- |
| 2. | காந்தி மோட்டார்ஸ், ஈரோடு | 14,930- |

மேற்படி இரு நிறுவனத்தாரும் ஒப்பந்தப்புள்ளி வைப்புத் தொகையினை மாநகராட்சி கருவூலத்தில் செலுத்தி உள்ளனர். வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள காந்தி மோட்டார்ஸ், ஈரோடு அவர்களின் ஒப்பதந்தப்புள்ளியை ஏற்கலாம். பொதுசுகாதார பணியின் அவசர அவசியத்தை கருத்தில் கொண்டு மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று, பணி உத்திரவு வழங்கி நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு-

1) மாமன்றம் அனுமதி வழங்கலாம்.
2) பொது சுகாதார பணியின் அவசர அவசியத்தை கருத்தில் கொண்டு மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி, வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கி நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

**இ1-673-11**

**292. அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

**16.** ஈரோடு மாநகராட்சிக்கு உட்பட்ட மண்டலம்-1ல் பொது சுகாதார உபயோகத்திற்கு பயன்படுத்தப்படும் வண்டி எண். டி.என்.33 ஏஎச் 2851-ல் உள்ள பழுதுகளை சரிசெய்து ஈரோடு வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் தகுதிச்சான்று (எப்.சி) பெறும் பணிக்கு இம்மாமன்றம் தனது தீர்மானம் 163 நாள் 21.12.11ல் உத்தேச செலவினம் ரூ.18,250-க்கு அனுமதி வழங்கியுள்ளது. அதன்படி மேற்படி பணிக்கு 30.12.11ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் இரண்டு நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. அவற்றின் விபரம் பின்வருமாறு-

| வ. எண். | நிறுவனத்தின் பெயர் | தொகை ரூ. |
|---|---|---|
| 1. | ஸ்ரீ பாக்யலட்சுமி மோட்டார் ஒர்க்ஸ், ஈரோடு | 18,250- |
| 2. | காந்தி மோட்டார்ஸ், ஈரோடு | 18,225- |

மேற்படி இரண்டு ஒப்பந்ததார்களும் ஒப்பந்தப்புள்ளி வைப்புத் தொகையினை மாநகராட்சி கருவூலத்தில் செலுத்தி உள்ளனர். வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்த காந்தி மோட்டார்ஸ், ஈரோடு அவர்களின் ஒப்பதந்தப்புள்ளியை ஏற்கலாம். பொதுசுகாதார பணியின் அவசர அவசியத்தை கருத்தில் கொண்டு மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று, பணி உத்திரவு வழங்கி நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு-

1) மாமன்றம் அனுமதி வழங்கலாம்.
2) பொது சுகாதார பணியின் அவசர அவசியத்தை கருத்தில் கொண்டு மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி, வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கி நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

**இ1-674-11**

**293. அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

**17.** ஈரோடு மாநகராட்சிக்கு உட்பட்ட மண்டலம்-1ல் பொதுசுகாதார உபயோகத்திற்கு பயன்படுத்தப்படும் டம்பர் பிளேசர் வண்டி எண். டி.என்.33 ஏஎச் 2880ல் உள்ள பழுதுகளை சரி செய்து ஈரோடு வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் தகுதிச்சான்று (எப்.சி) பெறும் பணிக்கு இம்மாமன்றம் தனது தீர்மானம் எண்.162 நாள் 21.12.11ல் உத்தேச செலவினம் ரூ.18,250-க்கு அனுமதி வழங்கியுள்ளது. அதன்படி மேற்படி பணிக்கு 30.12.11ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் பின்வரும் இரண்டு நிறுவனங்களின் ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. அவற்றின் விபரம் பின்வருமாறு-

| வ. எண். | நிறுவனத்தின் பெயர் | தொகை ரூ. |
|---|---|---|
| 1. | ஸ்ரீ பாக்யலட்சுமி மோட்டார் ஒர்க்ஸ், ஈரோடு | 18,250- |
| 2. | காந்தி மோட்டார்ஸ், ஈரோடு | 18,230- |

மேற்படி இரண்டு நிறுவனத்தாரும் ஒப்பந்தப்புள்ளி வைப்புத் தொகையினை மாநகராட்சி கருவூலத்தில் செலுத்தி உள்ளனர். வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்த காந்தி மோட்டார்ஸ், ஈரோடு அவர்களின் ஒப்பதந்தப்புள்ளியை ஏற்கலாம். பொதுசுகாதார பணியின் அவசர அவசியத்தை கருத்தில் கொண்டு மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று, பணி உத்திரவு வழங்கி நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு-

1) அனுமதி வழங்கலாம்.
2) பொது சுகாதாரப் பணியின் அவசர அவசியத்தை கருத்தில் கொண்டு மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி, வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கி நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

**இ1-672-11**

**294. அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

**18.** இம்மாநகராட்சி பகுதிகளில் பழுதடைந்துள்ள சாலைகளை பிளாஸ்டிக் கழிவுகளை பயன்படுத்தி தார்சாலைகள் சீரமைக்கவும், பிளாஸ்டிக் கழிவுகளை துண்டாக்கும் இயந்திரம் வாங்கவும், சேமிப்பு கிடங்கு அமைத்துக் கொள்ளும் பணிகள் 2011-12ல் மேற்கொள்ள பிரேரணைகள் அனுப்பப்பட்டதில் தற்போது நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண். 29255-2011-இ3-1 நாள் 11.01.2012ன்படி 2011-12ஆம் ஆண்டிற்கு மான்யமாக ரூ.28.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 2011-12ல் மேற்கொள்ளப்படும் சாலைப்பணிகள் விபரம் பின்வருமாறு-

| வ. எண். | பணியின் பெயர் | சாலையின் இனம் கி.மீ | மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1. | ராஜகோபால் தோட்டம், பச்சியம்மன் கோவில் வீதி மற்றும் ராயல் லே அவுட் சாலைகள் புதுப்பித்தல் பணி | 1.12 | 21.56 |
| 2. | வார்டு எண்.47ல் ரைஸ்மில் ரோடு சாலை புதுப்பித்தல் பணி | 0.36 | 4.00 |
| 3. | வார்டு எண்.55 புது அக்ரஹாரம் வீதி சாலை புதுப்பித்தல் பணி | 0.16 | 2.00 |
| 4. | வார்டு எண்.55 சொக்கலிங்கம் வீதி சாலை புதுப்பித்தல் பணி | 0.12 | 1.35 |
| 5. | வார்டு எண்.16ல் கங்காபுரத்திலிருந்து கொளத்துப்பாளையம் வரையுள்ள சாலை புதுப்பித்தல் | 1.60 | 16.50 |
| | மொத்தம் | 3.36 | 45.41 |
| இதரப்பணிகள் | | | |
| 1. | பிளாஸ்டிக் கழிவுகளை துண்டாக்கும் Shredding | 1 | 1.00 |

| | | | |
|---|---|---|---|
| | machine வாங்குதல் | | |
| 2. | பிளாஸ்டிக் கழிவுகள் சேகரம் செய்ய கிடங்கு கட்டுதல் | 1 | 6.00 |
| | பெரு மொத்தம் | 2 | 52.41 |

இப்பணிகளை 31.03.2012ற்குள் முடித்து முடிவறிக்கை அரசுக்கு சமர்ப்பிக்க வேண்டும் எனவும் மேற்படி கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட சாலைப்பணிகளை மேற்கொள்ளவும், பிளாஸ்டிக் கழிவுகளை துண்டாக்கும் இயந்திரம் (Shredding machine) வாங்கி பயன்படுத்தவும் மற்றும் பிளாஸ்டிக் கழிவுகளை சேகரம் செய்ய வெண்டிபாளையம் உரக்கிடங்கில் கிடங்கு அமைத்துக் கொள்ளவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. மேலும் மேற்படி திட்டப்பணிக்கு அரசு நிதி ஒதுக்கீடு ரூ.28.00 இலட்சம் போக கூடுதலாக வரும் தொகை ரூ.24.41 இலட்சத்தை பொது நிதியிலிருந்து ஈடு செய்து கொள்ளவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு-

1) மாமன்றம் பதிவு செய்யலாம்.
2) நிதி ஒதுக்கீடு போக கூடுதலாக வரும் தொகை ரூ.24.41 இலட்சத்தை பொது நிதியிலிருந்து ஈடு செய்து கொள்ளவும், இப்பணியை 31.03.2012க்குள் முடிக்க கால அளவு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதால் தற்போது மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளிகோரி நடவடிக்கை மேற்கொண்டதையும் மாமன்றம் அனுமதிக்கலாம்.

**இ1-269-12**

**295. அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

**19.** ஈரோடு மாநகராட்சி அலுவலகத்தில் நிறுவப்பட்டு பயன்பாட்டில் உள்ள Electrical Lift-ன் ஆண்டு பராமரிப்பு M/s Johnson Lifts Private Limited நிறுவனம் மூலம் மேற்கொள்ளப்பட்டு 31.12.2011 தேதியில் பராமரிப்பு ஒப்பந்தம் முடிவடைகிறது.

மேலும் வருகின்ற 01.01.2012 முதல் 31.12.2013 வரை ஆண்டு பராமரிப்பு பணி மேற்கொள்ள வேண்டியுள்ளது. மேற்கண்ட ஆண்டு பராமரிப்பு ஒப்பந்தத்தை மேற்கொண்டால்தான் Lift-க்கான உரிமத்தை புதுப்பிக்க இயலும். மேற்கண்ட ஆண்டு பராமரிப்பிற்கு M/s Johnson Lifts Private Limited நிறுவனம் ரூ.1,03,682- தொகை செலுத்துமாறு கேட்டுள்ளனர்.

தற்போதுள்ள Lift, Jobnson Lifts நிறுவனத்தால் நிறுவப்பட்டது என்பதாலும், பராமரிப்பிற்கான உதிரிபாகங்கள் இந்நிறுவனத்திடம் தான் கிடைக்கும் என்பதாலும், M/s Johnson Lifts Private Limited நிறுவனம் மூலம் ரூ.1,03,682- செலவில் ஆண்டு பராமரிப்பு பணியினை மேற்கொள்ளவும் , மேற்கண்ட தொகையினை இந்நிறுவனம் கேட்டுள்ளபடி முன்னதாக செலுத்தி ஆண்டு பராமரிப்பு ஒப்பந்தம் மேற்கொள்ளவும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு-

மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

**இ1-357-12**

**296. அனுமதி வழங்கப்பட்டது.**

**20**. நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கும் துறை. சென்னை அவர்களின் கடித எண். 28706/Election/2011-1, நாள் 25.11.2001-ல். கோயம்புத்தூர் மாநகராட்சி சட்டம் 1981, பிரிவு 25A-ன்படியும், அரசாணை எண் (D) 492, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கும் துறை. நாள். 21.10.99-ன்படியும், வணக்கத்திற்குரிய மேயர், மரியாதைக்குரிய துணை மேயர் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் அந்தந்த பதவிகளுக்குரிய தகுதிகளில் வெளிநாட்டுப் பயணம் மேற்கொள்ளப்படும்பொழுது மாமன்றம் மூலம் அரசின் எழுத்துபூர்வமான அனுமதி பெற்ற பின்னரே வெளிநாட்டுப் பயணம் மேற்கொள்ள வேண்டும் என தெரிவிக்கப்பட்டு வரப்பெற்ற கடிதம் மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது

.அலுவலகக் குறிப்பு-

மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**சி3-356-12**

**297. பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.**

**21.** வட்டாட்சியர் சமூக பாதுகாப்பு திட்டம், ஈரோடு அவர்களின் கடிதம் ந.க.எண். 8818/2010/எஸ்3, நாள்: 11.01.2012 தேதிய கடிதத்தில் இந்திரா காந்தி தேசிய முதியோர் ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் பயன்பெற பயனாளிகள் 228 நபர்களுக்கு வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள (BPL) எண் வழங்க கோரி உள்ளார். அவசர அவசியம் கருதி 228 நபர்களுக்கு மாமன்ற அனுமதியை எதிர்நோக்கி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று வறுமைக்கோட்டு (BPL) பட்டியல் எண் வழங்கியதற்கு மாமன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :

மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

இ5-11948-2011

**298. அனுமதி வழங்கப்பட்டது.**

**22.** நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் ந.க.எண். 10739/2006/IHSDP-I, நாள்: 06.07.2007 மற்றும் ந.க.எண். 7915/2011/IHSDP-II, நாள்: 21.02.2011-ன்படி ஒருங்கிணைந்த குடியிருப்பு மற்றும் குடிசைப் பகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ஈரோடு மாநகராட்சிக்கு 454 குடியிருப்புகள் கட்டுவதற்கு குடிசைப் பகுதிகளில் பயனாளிகள் தேர்வு செய்ய இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டு 296 குடியிருப்புகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. தேர்வு செய்யப்பட்ட பயனாளிகளில் 77 பயனாளிகள் குடியிருப்பு கட்ட முன்வரவில்லை. ஆகையால் விரிவாக்கம் செய்யப்பட்ட மாநகராட்சி எல்லைக்குட்பட்ட 4 மண்டலங்களில் உள்ள பகுதிகளிலிருந்து தகுதியான 38 பயனாளிகள் குடிசைப் பகுதிகளில் தேர்வு செய்யப்பட்டு விண்ணப்பங்கள் பெறப்பட்டு உள்ளது. எனவே மேற்காணும் திட்டத்தின் கீழ் பயனாளிகள் பயன்பெற மாமன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :

1. மாமன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்படி பணி திட்டப் பணியாக இருப்பதால் பணியின் அவசர அவசியம் கருதி வணக்கத்திற்குரிய மாமன்ற மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு பயனாளிகளுக்கு வழங்கியதற்கு மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

இ3-379-2012

**299. அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

**23.** இம்மாநகராட்சி அலுவலக வாகனம் TN 33 B 9289-ல் உள்ள பேட்டரி பழுதடைந்து தன் செயல்திறனை இழந்துள்ளது. மேலும் வாகனத்திலுள்ள டயர்கள் தேய்ந்தும் வாகனத்தினை இயக்க இயலாத நிலையில் உள்ளது. ஆகவே மேற்படி வாகனத்திற்கு புதிய பேட்டரி மற்றும் நான்கு டயர் டியூப் வாங்குவதற்கும் அதற்காகும் உத்தேச செலவினம் ரூ.24,000/-க்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :

மாமன்றம் அனுமதிக்கலாம்.

எச்2-417-2012

**300. அனுமதி வழங்கப்பட்டது.**

**24**. இம்மாநகராட்சி அலுவலக வாகனம் TN 33 AM 6597-க்கு புதிய டயர்கள் பொருத்தி மற்றும் குளிர்சாதன வசதி செய்து புதிய பெயர் பலகைகள் பொருத்தி ஆயில் சர்வீஸ் செய்து பழுதுகள் சரி செய்தல் பணிக்கு இம்மாமன்றம் தனது 21.12.2011-ம் தேதிய தீர்மானம் எண். 47-ல் உத்தேச செலவினம் ரூ.93000/-க்கு அனுமதி வழங்கியுள்ளது. அதன்படி மேற்படி பணிக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் விவரம் பின்வருமாறு.

| வ. எண். | நிறுவனத்தின் பெயர் | மொத்த செலவினம் ரூ. |
|---|---|---|
| 1. | ஜெயா ஆட்டோ ஒர்க்ஸ் | 92750- |
| 2. | ஸ்ரீபாலாஜி ஆட்டோ | 94175- |

இரு ஒப்பந்ததாரர்களும் ஒப்பந்தப்புள்ளி வைப்புத் தொகையினை மாநகராட்சிக் கருவூலத்தில் செலுத்தியுள்ளனர். வந்துள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

அலுவலகக் குறிப்பு :

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாக ரூ.92750/-க்கு கொடுத்துள்ள M/s. ஜெயா ஆட்டோ ஒர்க்ஸ் நிறுவனத்தாரின் குறைந்த விலைவிகித ஒப்பந்தப்புள்ளி உள்ளூர் சந்தை நிலவரத்திற்கும் ஏற்புடையதாக இருப்பதால் இதனை மாமன்றம் ஏற்கலாம்.

எச்2-10786-2011

**301. அலுவலகக்குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டது.**

**25**. இம்மாநகராட்சி அலுவலக தெருவிளக்கு பராமரிப்பு வாகனம் TN 33 F 0800-ல் உள்ள பழுதுகளை சரி செய்து தகுதிசான்று பெறுதல் பணிக்கு இம்மாமன்றம் தனது 21.12.2011-ம் தேதிய தீர்மானம் எண். 152-ல் உத்தேச செலவினம் ரூ.15000/-க்கு அனுமதி வழங்கியுள்ளது. அதன்படி மேற்படி பணிக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் விவரம் பின்வருமாறு.

| வ. எண். | நிறுவனத்தின் பெயர் | மொத்த செலவினம் ரூ. |
|---|---|---|
| 1. | ஸ்ரீபாலாஜி ஆட்டோ சர்வீஸ் | 15650- |
| 2. | ஜெயா ஆட்டோ ஒர்க்ஸ் | 14850- |

இரு ஒப்பந்ததாரர்களும் ஒப்பந்தப்புள்ளி வைப்புத் தொகையினை மாநகராட்சிக் கருவூலத்தில் செலுத்தியுள்ளனர். வந்துள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

அலுவலகக் குறிப்பு :

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாக ரூ.14850/-க்கு கொடுத்துள்ள M/s. ஜெயா ஆட்டோ ஒர்க்ஸ் நிறுவனத்தாரின் குறைந்த விலைவிகித ஒப்பந்தப்புள்ளி உள்ளூர் சந்தை நிலவரத்திற்கும் ஏற்புடையதாக இருப்பதால் இதனை மாமன்றம் ஏற்கலாம்.

எச்2-11493-2011

**302. அலுவலகக்குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டது.**

**26**. இம்மாநகராட்சி அலுவலக குடிநீர் டிராக்டர் TN 33 A 8709-ல் சேசீஸ் சேனலில் பழுதுகளை சரி செய்தல் பணிக்கு இம்மாமன்றம் தனது 21.12.2011-ம் தேதிய தீர்மானம் எண். 48-ல் உத்தேச செலவினம் ரூ.9700/-க்கு அனுமதி வழங்கியுள்ளது. அதன்படி மேற்படி பணிக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் விவரம் பின்வருமாறு.

| வ. எண். | நிறுவனத்தின் பெயர் | மொத்த செலவினம் ரூ. |
|---|---|---|
| 1. | முருகன் ஆட்டோஸ் | 9675- |
| 2. | காந்தி மோட்டார்ஸ் | 9650- |

இரு ஒப்பந்ததாரர்களும் ஒப்பந்தப்புள்ளி வைப்புத் தொகையினை மாநகராட்சிக் கருவூலத்தில் செலுத்தியுள்ளனர். வந்துள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

அலுவலகக் குறிப்பு :

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாக ரூ.9650/- கொடுத்துள்ள காந்தி மோட்டார்ஸ் நிறுவனத்தாரின் குறைந்த விலைவிகித ஒப்பந்தப்புள்ளி உள்ளூர் சந்தை நிலவரத்திற்கும் ஏற்புடையதாக இருப்பதால் இதனை மாமன்றம் ஏற்கலாம்.

இ1-10414-2011

**303. அலுவலகக்குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டது.**

**27**. ஈரோடு மாநகராட்சியின் வருவாய் மற்றும் மூலதன நிதி, குடிநீர் மற்றும் வடிகால் நிதி மற்றும் ஆரம்ப கல்வி நிதி ஆகியவைக்கான 2011-12-ம் ஆண்டின் திருத்திய மதிப்பீடு மற்றும் 2012-13-ம் ஆண்டின் உத்தேச மதிப்பீடு தயார் செய்து புத்தக வடிவில் அச்சிட்டு வணக்கத்திற்குரிய மேயர், மதிப்பிற்குரிய துணை மேயர், மாமன்ற உறுப்பினர்கள், அரசு செயலர் மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கும் வழங்க வேண்டியுள்ளதால், 2011-12-ம் ஆண்டின் திருத்திய மதிப்பீடு மற்றும் 2012-13-ம் ஆண்டின் உத்தேச மதிப்பீடு புத்தகம் 150 எண்ணிக்கையில் அச்சிட ஆகும் உத்தேச செலவு ரூ.2,50,000/-க்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :

2011-12-ம் ஆண்டின் திருத்திய மதிப்பீடு மற்றும் 2012-13-ம் ஆண்டின் உத்தேச மதிப்பீடு புத்தகம் அச்சிட ஆகும் உத்தேச செலவு ரூ.2,50,000/-க்கு (ரூபாய் இரண்டு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

பி1-10722-2011

**304. அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

**28**. ஈரோடு மாநகராட்சியின் 4 மண்டலங்களில் உள்ள தலைமை நீரேற்று நிலையங்களிலிருந்து விநியோகம் செய்யப்படும் குடிநீரில் திரவ குளோரின் கிருமி நாசினியாக பயன்படுத்தப்பட்டு வருகிறது. 2012-13-ஆம் ஆண்டில் குடிநீரில் கிருமி நாசினியாக பயன்படுத்த தேவைப்படும் 100 திரவ குளோரின் சிலிண்டர் வாங்கவும் அதற்கான தோராய செலவினம் ரூ.17.60 இலட்சத்திற்கும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :

மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

இ2-604-2012

**305. அனுமதி வழங்கப்பட்டது.**

**29**. ஈரோடு மாநகராட்சிக்கு அரசாணை எண். 249, நாள்: 11.12.2008-ல் ரூ.209.22 கோடி மதிப்பில் பாதாள சாக்கடைத் திட்டப் பணியை நிறைவேற்ற அனுமதி வழங்கப்பட்டது. அதன்படி மேற்கண்ட பணியை ஐந்து சிப்பங்களாக பிரிக்கப்பட்டது. இதில் முதல் நான்கு சிப்பங்களில் கழிவுநீர் குழாய் அமைத்தல், நீர்உந்து நிலையம் அமைத்தல், நீரேற்று நிலையம் அமைத்தல் மற்றும் கழிவுநீர் பிரதான குழாய் அமைத்தல் பணிகளும், சிப்பம் ஐந்தில் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கவும் வழிவகை செய்து ஒப்பந்தம் கோரப்பட்டு முதல் மற்றும் மூன்றாம் சிப்பப் பணிகள் நடைபெற்று வருகிறது.

| வ. எண். | பணியின் பெயர் | சாலையின் நீளம் கி.மீ | மொத்த மதிப்பீட்டு தொகை (ரூ.லட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | சொட்டையம்பாளையம் பாலம் முதல் ஓடை வரை தெய்வபுரம் மெயின்ரோடு சந்திப்பு முதல் அண்ணாதுரை வீடு வரை கூட்டுறவு காலனி மெயின்ரோடு குறுக்கு சந்துகள், காமராஜ் நகர் மெயின்ரோடு மற்றும் குறுக்கு வீதிகள் மற்றும் வி.ஜி.பி நகர் மெயின்ரோடு மற்றும் குறுக்கு வீதிகளில் தார் சாலை அமைத்தல் | 2.870 | 65.00 |
| 2 | இந்திராபுரம் மூன்று ரோடு சந்திப்பு முதல் ஆர்.என்.புதூர் வரை, பவானி ரோடு முதல் மங்களதுரை ரோடு, காந்திஜி நகர் மெயின் ரோடு குறுக்கு சாலைகள், பச்சாபள்ளி மேடு மெயின் ரோடு குறுக்கு ரோடு மற்றும் ஞானபுரம் மெயின்ரோடு மற்றும் குறுக்கு வீதிகளில் தார் சாலைகள் சீரமைத்தல் | 2.975 | 50.00 |
| 3 | பாதாள சாக்கடை திட்டம் செயல்படுத்திய குமிலான் குட்டை, செல்வம் நகர் பகுதிகளில் பழுதடைந்த சாலைகள் சீரமைத்தல் | 1.442 | 53.00 |
| 4 | ஞானபுரம் முதல் கொளத்து பாளையம் வரை (நான்கு சாலைகள் முதல் மணல்மேடு வரை) தார் சாலை மேம்பாடு செய்தல் | 3.300 | 57.00 |

| | | | |
|---|---|---|---|
| 5 | பாதாள சாக்கடை திட்டம் செயல்படுத்திய முருகேசன் நகர் மெயின்சாலை மற்றும் குறுக்கு சாலை பகுதிகளில் பழுதடைந்த தார்சாலைகள் சீர் அமைத்தல் | 0.682 | 38.00 |
| 6 | பாதாள சாக்கடை திட்டம் செயல்படுத்திய நல்லிதோட்டம் மெயின்ரோடு முதல் அமுதம் நகர், காமதேனு நகர், நசியனூர் ரோடு முதல் வீரப்பன்பாளையம் மெயின் சாலை மற்றும் சுப்பிரமணியநகர் குறுக்கு வீதிகளில் பழுதடைந்த தார் சாலைகள் சீர் அமைத்தல் | 1.576 | 68.00 |
| 7 | ராணாநகர், கண்ணகி வீதி, பெரியார் சாலை, சத்தியமூர்த்தி சாலை, ஜெய் நகர், வாய்க்கால் ரோடு, ராஜாஜி வீதி-1 அணைக்கட்டு குறுக்கு வீதி, அணைக்கட்டு 6வது குறுக்கு வீதிகளில்(வார்டு எண்.35, 36,39 மற்றும் 40) தார் சாலைகளை மறு சீரமைப்பு செய்தல் | 1.434 | 45.00 |
| 8 | முத்தம்பாளையம் ஊரணி முதல் பண்ணைகாடு வரை தார் சாலைகள் மேம்பாடு செய்தல் | 0.430 | 7.00 |
| 9 | சேனாதிபதிபாளையம் ரோடு மற்றும் அன்னைசத்யா நகர் தார் சாலைகளை மேம்பாடு செய்தல் | 0.980 | 73.00 |
| 10 | கலைநகர் மற்றும் கந்தன் நகர் பகுதிகளில் தார் சாலைகளை மேம்பாடு செய்தல் | 0.770 | 75.00 |
| | **மொத்தம்** | **16.459** | **531.00** |

மேற்கண்ட பணிகளுக்கு அரசு நிதி ஒதுக்கீடு போக கூடுதலாக வரக்கூடிய கூடுதல் செலவினத் தொகை ரூ.41.00 இலட்சத்தை மாநகராட்சி பொது நிதியிலிருந்து ஈடு செய்து கொள்ளவும் மற்றும் "திடக்கழிவு மேலாண்மை" திட்டப்பணியின் கீழ் மேற்கொள்ளப்படவுள்ள வ.எண்.1-ற்கான மதிப்பீடு ரூ.280.00 இலட்சம் வருகிறபடியால் இப்பணிக்கு மட்டும் நிர்வாக அனுமதியை நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களிடம் இதர அனைத்து பணிகளும் மாநகராட்சி அதிகார வரம்பிற்குட்பட்டுள்ள படியால், மேற்கூறியுள்ள இதர பணிகள் அனைத்திற்கும் நிர்வாக அனுமதி வழங்குவதற்கும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :

மாமன்றம் அனுமதிக்கலாம்.

இ1-10031-2011

## 319. அனுமதி வழங்கப்பட்டது.

**43.** ஈரோடு மாநகராட்சிக்கு உட்பட்ட மண்டலம்–2ல் பொது சுகதாரப் பிரிவில் இயங்கி வரும் டம்பர் பிளேசர் வாகனம் எண்.TN-33 AF- 4407 வாகனத்திற்கு தகுதி சான்று (FITNESS CERTIFICATE) பெறுவதற்கு, வாகனத்தில் உள்ள பழுதுகளை சரி செய்ய குறுகிய கால ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப் புள்ளிகள் 30.12.2011 அன்று வரப்பெற்றது

| வரிசை எண். | நிறுவனத்தின் பெயர் | ஒப்பந்தப் புள்ளியில் குறிப்பிட்டுள்ள தொகை |
|---|---|---|
| 1 | ஸ்ரீ பாலாஜி ஆட்டோ சர்வீஸ்,<br>156. விவேகானந்தா சாலை,<br>நசியனூர் மெயின் ரோடு, ஈரோடு–11 | ரூ. 38080/–<br>( ரூபாய் முப்பத்தி எட்டாயிரத்து எண்பது மட்டும்) |
| 2 | ஜெயா ஆட்டோ ஒர்க்ஸ்,<br>URC பள்ளி ரோடு, திண்டல்,<br>ஈரோடு–12 | ரூ. 34800/–<br>( ரூபாய் முப்பத்தி நான்காயிரத்து எண்ணூறு மட்டும்) |

இரு ஒப்பந்ததாரர்களும் முன்வைப்புத் தொகை செலுத்தியுள்ளனர்.

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஜெயா ஆட்டோ ஒர்க்ஸ் திண்டல் ஈரோடு அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

இப்பணி மிகவும் அத்தியாவசிய பணியாக இருப்பதால், பணியின் அவசர அவசியத்தை கருத்தில் கொண்டு மாமன்றத்தின் ஒப்புதலை எதிர்நோக்கி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கி நடவடிக்கை எடுக்க அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :

1. மாமன்றம் அனுமதி வழங்கலாம்
2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி, மாமன்ற அனுமதியை எதிர்நோக்கி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கி மேல் நடவடிக்கை எடுத்தமைக்கும் மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

இ2/11441/2011 மண்டலம்-2

## 320. அலுவலகக் குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.

**44.** ஈரோடு மாநகராட்சிக்கு உட்பட்ட மண்டலம்–2ல் பொதுப்பிரிவில் இயங்கி வரும் பொலிரோ ஈப்பு வாகனம் எண்.TN-33 AJ-3312 வாகனத்தில் உள்ள பழுதுகளை நீக்கம் செய்து கொடுப்பதற்கு, குறுகிய கால ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப் புள்ளிகள் 30.12.2011 அன்று வரப்பெற்றது

| வரிசை எண். | நிறுவனத்தின் பெயர் | ஒப்பந்தப் புள்ளியில் குறிப்பிட்டுள்ள தொகை |
|---|---|---|
| 1 | ஸ்ரீ பாலாஜி ஆட்டோ சர்வீஸ்,<br>156. விவேகானந்தா சாலை,<br>நசியனூர் மெயின் ரோடு, ஈரோடு–11 | ரூ. 30,300/–<br>( ரூபாய் முப்பது ஆயிரத்து முன்னூறு மட்டும்) |
| 2 | ஜெயா ஆட்டோ ஒர்க்ஸ்,<br>URC பள்ளி ரோடு, திண்டல்,<br>ஈரோடு–12 | ரூ. 27,830/–<br>( ரூபாய் இருபத்து ஏழு ஆயிரத்து எண்ணூற்று முப்பதுமட்டும்) |

வரப்பெற்றுள்ள இரு ஒப்பந்ததாரர்களும் முன்வைப்புத் தொகை செலுத்தியுள்ளார்கள்.

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஜெயா ஆட்டோ ஒர்க்ஸ் திண்டல் ஈரோடு அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

இப்பணி மிகவும் அத்தியாவசிய பணியாக இருப்பதால், பணியின் அவசர அவசியத்தை கருத்தில் கொண்டு மாமன்றத்தின் ஒப்புதலை எதிர்நோக்கி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கி நடவடிக்கை எடுக்க அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :

1. மாமன்றம் அனுமதி வழங்கலாம்
2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி, மாமன்ற அனுமதியை எதிர்நோக்கி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கி மேல் நடவடிக்கை எடுத்தமைக்கும் மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

இ2/11439/11 மண்டலம்-2

**321. அலுவலகக் குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**45.** இம்மாநகராட்சி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் அலுவலக அறையில் உள்ள ரீக்கோ ஜெராக்ஸ் இயந்திரத்தில் உள்ள பழுதுகளை சரி செய்வதற்கு அனுமதி வேண்டி மாமன்றத்தின் அனுமதி கோரப்பட்டதில் இம்மாமன்றம் தனது 21.12.2011-ம் தேதிய தீர்மானம் எண். 92-ல் புதியதாக ஜெராக்ஸ் இயந்திரம் வாங்குவதற்கு அனுமதி வழங்கியுள்ளது. ஆகவே வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் அலுவலக அறைக்குத் தேவையான ரீக்கோ MPC 3501 மாடல் ஜெராக்ஸ் இயந்திரத்தினை அரசு அனுமதித்துள்ள DGS&D விலையில் (Directorate General of Supplies and Disposals) நேரிடையாக அங்கீகாரம் பெற்ற ரீக்கோ இந்தியா லிட் நிறுவனத்தில் வாங்குவதற்கும் அதற்காகும் உத்தேச செலவினம் ரூ.3,72,393/-க்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :

மாமன்றம் அனுமதிக்கலாம்.

இ3-11605-11

**322. அனுமதி வழங்கப்பட்டது.**

**46.** நகர் ஊரமைப்பு இயக்கக 18.11.11ம் தேதிய அலுவலர்கள் கூட்ட நடவடிக்கையில், நகர் ஊரமைப்பு அபிவிருத்தி நிதியிலிருந்து பூங்கா அமைக்க மானியம் வழங்குவதாக தெரிவித்து அதற்கான உரிய முன்மொழிவுகள் அனுப்பும் படி கோரப்பட்டுள்ளது. அதன்படி ஈரோடு மாநகராட்சி மண்டலம்-4, வார்டு எண்.50க்குட்பட்ட வி.ஐ.பி தாமரை நகரில் நகர் ஊரமைப்பு இயக்குநர், ம.வ/ந.உ.இ.எண்.377/98-ல் அங்கீகாரம் பெற்ற மனைப்பிரிவில் பூங்காவிற்கென ஒதுக்கப்பட்ட 1380 ச.மீ பரப்பளவு உள்ள இடத்தில் மேற்படி மானிய நிதியிலிருந்து பூங்கா அமைக்க தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.15.00 இலட்சத்திற்கு மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :

1. மாமன்றம் அனுமதி வழங்கலாம்.
2. இப்பணிக்கு தேவையான மான்ய நிதியை பெற நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களுக்கு இப்பிரேரணையை அனுப்பவும் மற்றும் மான்ய நிதி ஒதுக்கீடு போக தேவைப்படும் நிதியை மாநகராட்சி பொது நிதியிலிருந்து ஈடு செய்து கொள்ளவும் மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

இ1-569-12

**323. அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

**47.** ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட மண்டலம்-3-க்குட்பட்ட காந்திஜிசாலையில் புதியதாக அமைக்கப்பட்டுள்ள மகப்பேறு மருத்துவமனைக்கு தேவையான 62.5 KVA ஜெனரேட்டர் செட் அமைப்பதற்கு 25.02.2011 அன்று முதல் அழைப்பாக ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டதில் வரப்பெற்ற மூன்று ஒப்பந்தப்புள்ளிகளில் ஒரு ஒப்பந்தப்புள்ளி மட்டுமே ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளின்படி தகுதி பெற்றிருந்ததால் மறு ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொள்ள 29.8.11ம் தேதிய 546ம் எண் மாமன்ற தீர்மானத்தில் அனுமதி வழங்கப்பட்டது.

மேற்கண்ட மாமன்ற அனுமதியினை தொடர்ந்து இப்பணிக்கு இரண்டாம் அழைப்பாக 21.12.2011 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் பின்வருமாறு

| | |
|---|---|
| 1. M/s.Palaniappa mill stores, Erode | Rs.777000.00 |
| 2. M/s.Shri Saraswathi Engineers, Erode | Rs.809991.00 |
| 3. Thiru D.Gajapathi, Erode | Rs.922112.00 |
| 4. M/s. Erode Power sales Corpn, Erode. | Rs.930000.00 |
| 5. M/s. Everbright Engg company, Chennai | Rs.936000.00 |
| 6. M/s.Samurai industrial Electricals Tirunelveli | Rs.950000.00 |

மேற்கண்ட ஒப்பந்ததாரர்களில் வ.எண்.1 முதல் 5 வரை குறிப்பிடப்பட்டுள்ள ஒப்பந்ததாரர்கள் ஒப்பந்தப்புள்ளி படிவத்திற்கான தொகையினையும், டேவணித் தொகையும் செலுத்தியுள்ளனர். வ.எண்.6-ல் குறிப்பிடப்பட்டுள்ள M/s.Samurai industrial Electricals Tirunelveli நிறுவனம் டேவணித் தொகையை வழங்கியுள்ளது. அதே சமயம் இந்நிறுவனம் ஒப்பந்தப்புள்ளி படிவத்திற்கான தொகையினை செலுத்தவில்லை.

வ.எண்.1, 2 மற்றும் 4 முதல் 6 வரை குறிப்பிடப்பட்டுள்ள நிறுவனங்கள் சிறப்பு நிபந்தனைகளில் குறிப்பிடப்பட்டுள்ள அங்கீகாரம் பெற்ற முகவர் (Dealer) மற்றும் ஜெனரேட்டர்செட் நிறுவியதற்கான அனுபவத்திற்கான சான்றுகளை ஒப்பந்தப்புள்ளியுடன் வழங்கியுள்ளனர். வ.எண்.3ல் குறிப்பிடப்பட்டுள்ள ஒப்பந்ததாரர் ஜெனரேட்டர்செட் நிறுவியதற்கான சான்றுகளை ஒப்பந்தப்புள்ளியுடன் வழங்கியுள்ளனர். ஆனால் முகவருக்கான சான்று வழங்கவில்லை.

எனவே வரப்பெற்றுள்ள ஆறு ஒப்பந்தப்புள்ளிகளில் ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளுக்கான சான்றுகளை வழங்கி, குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள M/s.Palaniappa mill stores, Erode நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மாமன்ற அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி இறுதி செய்யும் குழுவினரால் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள M/s.Palaniappa mill stores, Erode நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :

மாமன்றம் அனுமதி வழங்கலாம்

இ3-608-11

**324. மகப்பேறு மருத்துவமனைக்குத் தேவையான 625 KVA ஜெனரேட்டர் செட் அமைக்க குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள மெசர்ஸ் பழனியப்பா மில் ஸ்டோர்ஸ், ஈரோடு நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணியினை மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டது.**

**48.** இம்மாநகராட்சியில் புதிய அலுவலகம் மற்றும் மாமன்றக்கூட கட்டிடத்திற்கு தேவையான பர்னிச்சர் பொருட்களை ரூ.60.00 இலட்சம் மதிப்பீட்டில் வாங்க மாமன்ற தீர்மான எண்.583 நாள். 28.08.11-ல் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இப்பணிக்கு இரண்டாம் அழைப்பாக 23.11.2011 அன்று பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியிருந்த M/s. ஏ.பி. தாமஸ் வுட் இண்டியா (பி) லிமிடெட், ஈரோடு நிறுவனம் ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளின்படி தகுதி பெறாததால் மறு ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொள்ள 21.12.2011-ம் தேதிய 234-ம் எண் மாமன்ற தீர்மானத்தில் அனுமதி வழங்கப்பட்டது. மேற்கண்ட மாமன்ற அனுமதியினை தொடர்ந்து இப்பணிக்கு மூன்றாம் அழைப்பாக 25.01.12 அன்று E-Tendering-ல் ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டதில் கீழ்க்கண்ட நிறுவனங்கள் ஒப்பந்தப்புள்ளிகள் வழங்கியுள்ளன.

| | | |
|---|---|---|
| 1. | M/s. S.M.S. Industries, Ramanathapuram | Rs. 5655100.00 |
| 2. | M/s. The Trend, Erode | Rs. 4599219.60 |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் பரிசீலனை செய்யப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் டேவணித்தொகை ரூ.60000/-க்கான வங்கி வரைவோலை அளித்துள்ளார்கள். மேலும் இரண்டு நிறுவனங்களும் ஒப்பந்தப்புள்ளி சிறப்பு நிபந்தனைகளுக்கான அத்தாட்சி சான்றிதழ்களை வழங்கியுள்ளார்கள். மேற்கண்ட இரண்டு

நிறுவனங்களில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள வரிசை எண்.2-ல் குறிப்பிடப்பட்டுள்ள M/s. The Trend, Erode நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மாமன்ற அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொள்ள, ஒப்பந்தப்புள்ளி இறுதி செய்யும் குழுவினரால் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள M/s. The Trend, Erode நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :

மாமன்றம் அனுமதி வழங்கலாம்

இ1-7880-2008

**325. ஒத்தி வைக்கப்பட்டது.**

**49.** ஈரோடு மாநகராட்சியின் தலைமை நீரேற்று நிலையத்தில் சுத்த நீரேற்றம் செய்யும் 270 எச்.பி மோட்டார் பம்ப்செட் யூனிட்-1ன் Starter பழுது ஏற்பட்டதை சரி செய்ய ரூ.2.60 இலட்சத்திற்கு மாமன்ற தீர்மான எண்.54 நாள் 21.12.11-ல் மாமன்றம் அனுமதி வழங்கியுள்ளது. அதனைத் தொடர்ந்து மேற்படி மோட்டார் பழுது நீக்கம் செய்ய 25.01.12 அன்று E-Tendering முறையில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது.

| | |
|---|---|
| 1) M/s. நேஷனல் & கோ, ஈரோடு | ரூ.259771/- |
| 2) M/s.ஹரீஷ் என்ஜினியரிங், ஈரோடு | ரூ.259903/- |

மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் ஒப்பந்தப்புள்ளி படிவத்தின் விலை மற்றும் முன்வைப்புத் தொகையினை ஒப்பந்தப்புள்ளி நிபந்தனையின்படி வரைவோலையாக செலுத்தியுள்ளார்கள். பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த விலை விகிதம் வழங்கியுள்ள M/s. நேஷனல் & கோ, ஈரோடு நிறுவனத்தாரின் ஒப்பந்தப்பபுள்ளி விலை விகிதம் (ரூ.259771/-) உள்ளூர் பட்டறை விலை விகிதத்திற்கு ஏற்புடையதாக உள்ளதால் மேற்படி M/s. நேஷனல் & கோ, ஈரோடு நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று மாமன்ற ஒப்புதல் பெற்று பணி மேற்கொள்ளலாம் என ஒப்பந்தப்புள்ளி இறுதி செய்யும் குழு பரிந்துரை செய்துள்ளது. குடிநீர் பணியின் அவசர அவசியத்தை கருதி மாமன்ற ஒப்புதலை எதிர்நோக்கி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன்அனுமதி பெற்று மேற்படி பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள M/s. நேஷனல் & கோ, ஈரோடு நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்திரவு வழங்கி நடவடிக்கை மேற்கொண்டமைக்கு மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :

1. மாமன்றம் அனுமதிக்கலாம்
2. குடிநீர் பணியின் அவசர அவசியத்தை கருதி மாமன்ற ஒப்புதலை எதிர்நோக்கி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன்அனுமதி பெற்று குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள M/s. நேஷனல் & கோ, ஈரோடு நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்திரவு வழங்கி நடவடிக்கை மேற்கொண்டமைக்கு மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

இ2-10867-2011

**326. அலுவலகக் குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**50. மூன்றாம் மண்டல தலைவர் திரு இரா. மனோகரன் அவர்களால் கொண்டு வரப்பட்ட தீர்மானம்.**

- ஈரோடு மாநகராட்சி 32வது வார்டுக்கு உட்பட்ட கணபதி நகர் பகுதியிலுள்ள ஆழ்குழாய் கிணற்றில் மின்மோட்டார் பொருத்தி, அதற்கு சின்டெக்ஸ் டேங்க் அமைத்து, குடிநீர் குழாய் அமைத்து வீடுகளுக்கு குடிநீர் விநியோகம் செய்து தர இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

**327. 2வது மண்டலத் தலைவர் திரு. பி.கேசவமூர்த்தி அவர்கள் முன்மொழிய 4வது மண்டலத் தலைவர் திருமதி.பி.காஞ்சனா அவர்கள் வழிமொழிய தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.**

**51. 7-வது வார்டு மாமன்ற உறுப்பினர் திரு. எஸ். செல்வன் அவர்களால் கொண்டுவரப்பட்ட தீர்மானம்.**

- நத்தக்காட்டு தோட்டத்தில் இருந்து ஓடைப்பள்ளம் வரை வடிகால் அமைக்க இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.
- கான்வென்ட் காலனி எதிர்புறம் இரண்டுபுறம் வடிகால் அமைத்து தார்சாலை அமைக்க இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.
- ஈரோடு மாநகராட்சி 7வது வார்டுக்கு உட்பட்ட அஜந்தா நகர் மற்றும் அதன் பக்கம் நான்கு வீதிகளைக் கொண்டுள்ளது. இங்கு நான்கு வீதிகளிலும் குடிநீர் குழாய் இல்லாத காரணத்தால் நான்கு வீதிகளுக்கும் குடிநீர் குழாய் அமைத்துத் தர இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

**328. 7வது வார்டு மாமன்ற உறுப்பினர் திரு. எஸ். செல்வம் அவர்கள் முன்மொழிய 8வது வார்டு மாமன்ற உறுப்பினர் திரு. கு.கிருஷ்ணராசு அவர்கள் வழிமொழிய தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.**

**52. 9-வது வார்டு மாமன்ற உறுப்பினர் திருமதி. சி. ராஜேஸ்வரி அவர்களால் கொண்டுவரப்பட்ட தீர்மானம்.**

- பெரியகுட்டை தெருவின் (மண்டலம்-1) பின்புற பகுதி ஆண்கள் கழிப்பிட சாக்கடையை கான்கிரீட் சிலாப் அமைத்து மூடிட இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.
- ராஜாஜி வீதியின் குறுக்கு சந்து சாக்கடையை கான்கிரீட் சிலாப் கொண்டு மூடிட இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.
- காமராஜ் காலனியில் 16 ரோடு பகுதியில் சமுதாய கூடம் ஒன்று கட்டிக் கொடுத்திட இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.
- காமராஜ் காலனியின் சாக்கடையின் அகலப்பகுதியை குறைத்து சிலாப் அமைக்க இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.
- தெப்பகுளம் பகுதியில் மினி ஹைமாஸ்ட் விளக்கு அமைக்க இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.
- கோவலன் தெரு, பாவேந்தர் தெரு, திருமலை தெரு, சத்தி ரோடு, தெப்பகுளம் தெரு பகுதிகளில் மேல்நிலை நீர்த்தொட்டி அமைத்து எஞ்சியுள்ள ஆழ்குழாய் கிணற்றில் மின்மோட்டார் பொருத்தி தண்ணீர் குழாய் வைத்து அருகிலுள்ள வீதிகளுக்கு தண்ணீர் வசதி செய்து கொடுத்திட இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

**329. 9வது வார்டு மாமன்ற உறுப்பினர் திருமதி. சி. ராஜேஸ்வரி அவர்கள் முன்மொழிய 11வது வார்டு மாமன்ற உறுப்பினர் திரு. பி. முனுசாமி அவர்கள் வழிமொழிய தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.**

**53. 13-வது வார்டு மாமன்ற உறுப்பினர் திரு. எம்.கே. ராஜா அவர்களால் கொண்டுவரப்பட்ட தீர்மானம்.**

- திருநகர் காலனி முதல் வீதியில் கதவு எண்.23 அருகே உள்ள மின்கம்பத்தில் புதிதாக விளக்கு அமைக்க இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.
- ஜெயகோபால் வீதி-2ல் இருக்கும் ஆழ்குழாய் கிணறு சின்டெக்ஸ் டேங்கிலிருந்து பைப் லைன் மூலம் வீதியில் 2 இடத்தில் குடிநீர் குழாய் அமைக்க இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

- திருநகர் காலனி, சின்னப்பா லே அவுட் ரோடுகளில் தார்பேட்ஜ் ஒர்க் செய்திட இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.3

**330. 13வது வார்டு மாமன்ற உறுப்பினர் திரு. எம்.கே. ராஜா அவர்கள் முன்மொழிய 7வது வார்டு மாமன்ற உறுப்பினர் திரு. எஸ். செல்வன் அவர்கள் வழிமொழிய தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.**

**54. 14-வது வார்டு மாமன்ற உறுப்பினர் திரு. எஸ். உதயகுமார் அவர்களால் கொண்டுவரப்பட்ட தீர்மானம்.**

- வண்டியுரான் கோவில் மெயின் ரோடு அலிபாய் ப்டடறை அருகில் ஏற்கனவே உள்ள பொது கழிப்பிடம் பழுதடைந்துள்ளது. அதை, மீண்டும் புதுப்பித்து தர இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.
- ராமசாமி நகரில் உள்ள குடிசை பகுதிகளில் ஏற்கனவே உள்ள கான்கிரீட் தளமும் மற்றும் சாக்கடையும் பழுதடைந்துள்ளது. அதை, இருபுறமும் சாக்கடை அமைத்து கான்கிரீட் தளம் புதுப்பித்து தர இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.
- கக்கன் நகர் கருப்புராயன் கோவில் குறுக்கு வீதியில் புதிய சாக்கடை மற்றும் கான்கிரீட் தளம் அமைத்து தர இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.
- ராமமூர்த்தி நகர் குறுக்கு வீதியில் புதிய இருபுறமும் சாக்கடை அமைத்து மற்றும் கான்கிரீட் தளம் அமைத்து தர இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.
- கக்கன் நகர் முதல் வீதியில் மின்சார இரும்பு கம்பம் நடுரோட்டில் அமைந்துள்ளது. போக்குவரத்துக்கு இடையூறாக இருப்பதால் ஓரமாக மின்சார கம்பம் அமைத்து தர இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.
- ராமமூர்த்தி நகர் கதவு எண். 218, அருகில் உள்ள சிமெண்ட் மின்சார கம்பம் மிகவும் பழுதடைந்துள்ளது. அதை மாற்றி புது கம்பம் அமைத்து தர இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.
- கமலா நகர் சமயபுரம் கோவில் வீதியில் உள்ள மின்சார இரும்பு கம்பம் மிகவும் பழுதடைந்துள்ளது. அதை மாற்றி புது கம்பம் அமைத்து தர இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.
- வண்டியுரான் கோவில் வீதி தண்ணீர் டேங்க் அருகில் உள்ள மின்சார சிமெண்ட் கம்பம் நடுரோட்டில் உள்ளதை ஓரமாக அமைத்து தர இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.
- வண்டியுரான் கோவில் வீதி முருகேசன் வீடு அருகில் உள்ள மின்சார இரும்பு கம்பம் மிகவும் பழுதடைந்துள்ளதை மாற்றி அமைத்து தர இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

**331. 14வது வார்டு மாமன்ற உறுப்பினர் திரு. எஸ். உதயகுமார் அவர்கள் முன்மொழிய 15வது வார்டு மாமன்ற உறுப்பினர் திரு. க. அண்ணாமலை அவர்கள் வழிமொழிய தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.**

**55. 16-வது வார்டு மாமன்ற உறுப்பினர் திரு. பி. முத்தான் அவர்களால் கொண்டுவரப்பட்ட தீர்மானம்.**

- கொளத்துப்பாளையம் ஊர் பகுதிக்கு சமுதாயக்கூடம், தானிய சேமிப்பு கிடங்கு மற்றும் கழிப்பிடம் அமைத்துக் கொடுக்க இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.
- கங்காபுரம் மற்றும் மேட்டையன் காடு பகுதிகளுக்கு குடிநீர் வசதி செய்து தர இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.
- கொங்கம்பாளையம் எல்.வி.பி பகுதிக்கு சாக்கடை வசதி ஏற்படுத்த இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.
- மாமரத்துப்பாளையம் அரிசன காலனி மற்றும் நரிப்பள்ளம் பகுதிகளுக்கு குடிநீர் வசதி ஏற்படுத்த இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

**332. 16வது வார்டு மாமன்ற உறுப்பினர் திரு. பி. முத்தான் அவர்கள் முன்மொழிய 17வது வார்டு மாமன்ற உறுப்பினர் திரு. எம்.ஜி. பழனிசாமி அவர்கள் வழிமொழிய தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.**

56. 19-வது வார்டு மாமன்ற உறுப்பினர், திரு டி.தங்கமுத்து அவர்களால் கொண்டு வரப்பட்ட தீர்மானம்.

- மாணிக்கம்பாளையம் விநாயகர் கோயில் முன் உள்ள அடி பம்பிற்கு பதிலாக போர்வெல் கம்பரஸர் மற்றும் சின்டெக்ஸ் டேங்க் வைத்து குடிநீர் சப்ளை செய்து தர இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.
- மாணிக்கம்பாளையம் - பெருமாள்காடு ரேசன் கடைக்கு அருகில் கிழக்கு பக்கம் உள்ள வீதியில் சின்டெக்ஸ் டேங்க் வைத்துள்ள இடத்திலிருந்து பூசாரி தோட்டம் வரையில் குடிநீர் செல்லும் பைப் பழுதுபட்டுள்ளதால் அதற்கு பதிலாக புதிய பைப் அமைத்துத் தர இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.
- பூசாரி தோட்டம் பகுதியில் உள்ள கொங்கு பள்ளி கூடத்திற்கு அடுத்த வீதியிலிருந்து கடைசி தெருவிற்கு புதிய குடிநீர் பைப் அமைத்துத் தர இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.
- வீட்டுவசதி வாரியம் (பழைய வார்டு எண்.9-ல்) Phase-2-ன் பின்புறம் அதாவது வழக்கறிஞர் தங்கவேல் வீட்டு வீதியில் சாக்கடை அமைத்துத்தர இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.
- ஏற்கனவே, மாணிக்கம்பாளையம் வீட்டுவசதி வாரியத்தில் அமைக்கப்பட்டுள்ள 1,00,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலைத்தொட்டி பழுதடைந்த நிலையில் உள்ளதால், Phase-2- மேல்நிலைப்பள்ளி விளையாடு மைதானத்தில் 10,00,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலைத் தொட்டி அமைத்துத்தர இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.
- கோவை வீட்டுவசதி வாரியம் (19 மற்றும் 20வது வார்டு) ஏற்கனவே பாதாள சாக்கடை சுத்தம் செய்ய துப்புரவு தொழிலாளர்களுக்குப் பதிலாக சென்னை மாநகராட்சியில் உள்ளதுபோல் JET ROD MACHINE வாங்கி அதன் மூலம் பாதாள சாக்கடை சுத்தம் செய்ய ஏற்பாடு செய்து தர இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

**333. 19வது வார்டு மாமன்ற உறுப்பினர் திரு. டி. தங்கமுத்து அவர்கள் முன்மொழிய 25வது வார்டு மாமன்ற உறுப்பினர் திரு. கே. நடராஜன் அவர்கள் வழிமொழிய தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.**

**57. 28-வது வார்டு மாமன்ற உறுப்பினர் திரு. சி.ஆர். நாச்சிமுத்து அவர்களால் கொண்டுவரப்பட்ட தீர்மானம்.**

- வளையக்கார வீதியில் ஏற்கனவே உள்ள ஆழ்குழாய் கிணற்றில் மின்மோட்டார் பொருத்தி சின்டெக்ஸ் டேங்க் அமைத்து குழாய் நீட்டிப்பு செய்து தண்ணீர் விநியோகம் செய்திட இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

**334. 28வது வார்டு மாமன்ற உறுப்பினர் திரு. சி.ஆர். நாச்சிமுத்து அவர்கள் முன்மொழிய 31வது வார்டு மாமன்ற உறுப்பினர் திருமதி. என். சரஸ்வதி அவர்கள் வழிமொழிய தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.**

**58. 30-வது வார்டு மாமன்ற உறுப்பினர் திருமதி. கே. லட்சுமி அவர்களால் கொண்டுவரப்பட்ட தீர்மானம்.**

- ஜானகியம்மாள் லே-அவுட் பகுதியில் உள்ள அனைத்து பகுதிகளிலும் புதிய சாக்கடைகள் கட்டித்தர இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.
- ராஜாஜிபுரம் காரை வீதியில் சாக்கடை அமைத்து, பழுதடைந்த இடங்களுக்கு சிமெண்ட் பாலம் கட்டித்தர இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.
- பொது குளியலறைக்கு தண்ணீர் வசதி செய்து தர இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.
- சுகாதார வளாகத்தில் உள்ள பெண்கள் கழிவறையை மராமத்து பணி செய்து தர இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.
- ராஜாஜிபுரம் காரை வீதியில் பாலம் அமைத்து, சாக்கடைகள் புதியதாக கட்டிக் கொடுக்க இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

- ராஜாஜிபுரத்தில் மாகாளி அம்மன் கோயில் பின்புறம் உள்ள பகுதியில் குடிநீர் குழாய் இணைப்பு ஒன்று வரகப்ப வீதிக்கும், சகன் வீதிக்கும் இடைப்பட்ட இடத்தில் அமைக்க இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.
- சகன் வீதி முழுவதும் புதியதாக சாக்கடை அமைத்தும் மற்றும் மெயின் ரோட்டில் கான்கிரீட் பாலம் அமைக்கவும் இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.
- I.S.P. ராஜாஜிபுரத்தில் அமைந்துள்ள சுகாதார வளாகத்தை பராமரித்தும் மற்றும் குடிநீர் இணைப்பு அமைத்துக் கொடுக்கவும் இம்மாமன்றம் தீர்மானிக்கிறது

**335. 30வது வார்டு மாமன்ற உறுப்பினர் திருமதி. கே. லட்சுமி அவர்கள் முன்மொழிய 29வது வார்டு மாமன்ற உறுப்பினர் திரு. பொ. இராமச்சந்திரன் அவர்கள் வழிமொழிய தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.**

**59. 33-வது வார்டு மாமன்ற உறுப்பினர், திருமதி G.ராதா அவர்களால் கொண்டு வரப்பட்ட தீர்மானம்.**

- ஈரோடு மாநகராட்சி 33வது வார்டுக்கு உட்பட்ட காரபாறை அரிசன காலனியிலுள்ள கழிப்பிடத்தில் இருக்கும் தண்ணீர் குழாய்கள் அனைத்தும் மாற்றித்தர இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

**336. 33வது வார்டு மாமன்ற உறுப்பினர் திருமதி. ஜி. ராதா அவர்கள் முன்மொழிய 34வது வார்டு மாமன்ற உறுப்பினர் திருமதி. பி. பூமதி அவர்கள் வழிமொழிய தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.**

**60. 37-வது வார்டு மாமன்ற உறுப்பினர் திருமதி. பி. கலையரசி அவர்களால் கொண்டுவரப்பட்ட தீர்மானம்.**

- காசிபாளையம் பாலம் அருகில் அமைந்துள்ள காலி இடத்தில் காசிபாளையம் உயர்நிலைப் பள்ளிக்கு விளையாட்டு மைதானம் அமைக்க இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.
- காசிபாளையம் பகுதியில் அமைந்துள்ள நிலத்தடி நீர் தொட்டி மேல் மூடி பழுதடைந்துள்ளதை சரி செய்திட இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.
- காசிபாளையம் எம்.பி. நகர் பகுதியில் குழாய் மற்றும் தெருவிளக்கு வசதி ஏற்படுத்திக் கொடுத்திட இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.
- கல்யாணசுந்தரம் வீதியில் வாய்க்கால் மேட்டில் மின்கம்பத்தில் (மின்கம்பம் எண். 39) சோடியம் விளக்கு பொருத்தி தர இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.
- கண்ணகி வீதியில் பழுதடைந்த மின்கம்பங்களில் (கம்பம் எண். 4, 5, 7) உள்ள சுவிட்சு பாக்ஸ்களை மாற்றி அமைத்துக் கொடுத்திட இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.
- 15 எண்ணிக்கையிலான குப்பைக்கலன்கள் வைத்துக் கொடுத்திட இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.
- காந்திஜி வீதியில் 4 இடங்களில் உப்புநீர் குழாய் அமைத்துக் கொடுத்திட இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

**337. 37வது வார்டு மாமன்ற உறுப்பினர் திருமதி. பி. கலையரசி அவர்கள் முன்மொழிய 38வது வார்டு மாமன்ற உறுப்பினர் திருமதி. எஸ். சொர்ணம் அவர்கள் வழிமொழிய தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.**

**61. 40-வது வார்டு மாமன்ற உறுப்பினர், திருமதி A.ஸ்ரீபிரியா அவர்களால் கொண்டு வரப்பட்ட தீர்மானம்.**

- காந்திஜி ரோடு மெயின் ரோட்டின் பசுபதி ஆஸ்பிட்டல் எதிரில் உப்பு தண்ணீர் குழாய் நீடிப்பு செய்த தர இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

- காமராஜர் வீதி-1 பழைய காவல் நிலையம் அருகில் உப்பு தண்ணீர் குழாய் நீடிப்பு செய்த தர இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

- கஸ்தூரிபாய் வீதி முதல் காமராஜர் வீதி சந்திப்பில் உப்பு தண்ணீர் குழாய் நீடிப்பு செய்த தர இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

- மாகாளியம்மன் கோயில் பின்புறம் ஏறத்தாழ 100 குடும்பத்திற்கு மேல் வசித்து வருவதால் அந்த பகுதிக்கு உப்பு தண்ணீர் குழாய் நீடிப்பு செய்து தர இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

- அம்பேத்கர் வீதி சிஎஸ்ஐ.பார்லி சர்ச் பின்புறமும், சர்ச் அருகிலும் பெரிய கிணறு அமைந்துள்ளது. கிணற்றின் அருகில் சிறியவர் மற்றும் குழந்தைகள் விளையாடிக்கொண்டிருக்கிறார்கள். கிணற்றின் சுற்றுசுவர் உயரம் குறைவாக உள்ளதால் அந்த கிணற்றில் பல உயிர் இழப்பு ஏற்படுகிறது. எனவே போர்க்கால அடிப்படையில் அந்த கிணற்றிற்கு மேல் கம்பி வேலி அமைத்துத்தர இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

- மாகாளியம்மன்கோயில் பின்புறம் சூரம்பட்டியில் உள்ள அனைத்து வடிகால் சாக்கடை தண்ணீரும் அந்த வடிகால் வழியாக செல்கிறது. வடிகால் உயரம் குறைவாக உள்ளதால் பெரியவர்களும், சிறியவர்களும் அதில் விழுந்து விடுகிறார்கள். எனவே அந்த வடிகால் சுவரை உயர்த்தி தர இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

- ஜெகநாதபுரம் காலனி ஆர்ச் வீதியில் நான்குவழி சாலை அமைந்துள்ளது. அந்த வழியில் பொதுமக்கள் அதிகமாக செல்கிறார்கள். அந்த பகுதி மிகவும் இருளான பகுதியாக உள்ளதால் அங்கே திருட்டு மற்றும் வழிப்பறி நடந்து வருகிறது. எனவே அந்த இடத்திற்கு மினி ஹைமாஸ் மின்விளக்கு அமைத்துத்தர இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

- வ.உ.சி.வீதியில் நான்கு வழி சாலை அமைந்துள்ளது. அந்த வழியில் பொதுமக்கள் அதிகம் செல்லும் பகுதியாக உள்ளது. அந்த பகுதி மிகவும் இருளான பகுதியாக உள்ளதால் (சூரம்பட்டி சுடுகாடு அருகில்) அந்த இடத்திற்கு மினி ஹைமாஸ் மின்விளக்கு அமைத்துத்தர இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

**338. 40வது வார்டு மாமன்ற உறுப்பினர் திருமதி. ஏ. ஸ்ரீப்ரியா அவர்கள் முன்மொழிய 41வது வார்டு மாமன்ற உறுப்பினர் திருமதி. பி. கஸ்தூரி அவர்கள் வழிமொழிய தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.**

**62. 41-வது வார்டு மாமன்ற உறுப்பினர் திருமதி. பி. கஸ்தூரி அவர்களால் கொண்டுவரப்பட்ட தீர்மானம்.**

- பெருமாள் காடு வீதி மற்றும் ஈ.எம்.எம். மெயின் கிரேஸ் ஓபன் சர்ச் சாலையை மேம்படுத்தி தார்சாலை அமைத்து தர இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.
- பெருமாள் காடு வீதி மனோகர் பீரோ கம்பெனியில் இருந்து 51-வது வார்டு கான்கிரீட் சாலை வரை தார்சாலை அமைத்து தர இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.
- மேலே குறிப்பிட்ட இரு சாலை அமைக்கும் பொழுது சாக்கடை வசதி செய்தும் பழுதடைந்த சாக்கடையை சரி செய்தும் தர இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.
- சாந்தன்கருக்கு 1-வது வீதி கடைசியில் விநாயகர் கோவில் அருகில் பழுது அடைந்த சாக்கடையை புதுப்பித்து தர இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.
- ஈ.எம்.எம். மெயின் வீதி, பெரியதோட்டம் பீரோ கம்பெனி அருகில் உள்ள தன்ராஜ் வீட்டிற்கு முன்பு மின்கம்பத்தில் வீதி லைட் அமைத்து தர இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.
- ஈ.எம்.எம். மெயின் வீதி பெரியதோட்டம் பகுதியில் உள்ள சாக்கடைகள் அனைத்தும் பழுது அடைந்து உள்ளது. இதனை புதுப்பித்து தர இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.
- ஸ்டோனி பிரிட்ஜ் பகுதியில் சாலைகள் பழுது அடைந்துள்ளது. இதற்கு புதிய சாலை அமைத்து தர இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

**339. 41வது வார்டு மாமன்ற உறுப்பினர் திருமதி. பி. கஸ்தூரி அவர்கள் முன்மொழிய 43வது வார்டு மாமன்ற உறுப்பினர் திருமதி. ஆர். பரிமளா அவர்கள் வழிமொழிய தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.**

**63. 56-வது வார்டு மாமன்ற உறுப்பினர் திரு செ. முருகநாதன் அவர்களால் கொண்டு வரப்பட்ட தீர்மானம்.**

- விவிசிஆர். நகர் 2வது வீதியில் 2,3,4,5,7 ஆகிய இடங்கள் 20 வருடங்களுக்கு மேலாக சாலை எதுவும் போடாமல் இருப்பதால், மேற்படி சாலைக்கு மெட்டல் சாலை போட்டு அமைத்துக் கொடுக்க இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.
- விவிசிஆர். நகர் 2வது வீதியில் உள்ள பொது கழிப்பிடத்தில் கதவு, மின்விளக்கு, பொது பராமரிப்பு செய்து தர இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.
- அய்யனாரப்பன் கோயில் வீதியில் பொது கழிப்பிடம் பராமரிப்பு செய்து தர இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.
- மாரிமுத்து வீதியில் (பள்ளி வாசல் அருகே) பொது கழிப்பிட கான்கிரீட் கூரை சரிசெய்து, விரிசல் விட்ட சுவர் சரிசெய்தும், மற்றும் மின் விளக்கு பொருத்தியும், கதவு பொது பராமரிப்பு செய்துதர இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.
- விவிசிஆர். நகர் 1வது வீதி நான்கு முனை சந்திப்பில் சீரங்காயம்மாள் திருமண மண்டபம் அருகில் உயர் மின்கோபுர விளக்கு ஒன்று (IMAS) அமைத்து தர இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.
- விவிசிஆர். நகர் 2வது லேஅவுட்டில் 5வது வீதியில் பழைய மின்கம்பத்தில் புதிதாக மின்குழல் விளக்கு (டியூப் லைட்) அமைத்துத்தர இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.
- விவிசிஆர். நகர் 2வது லேஅவுட்-2-1வது வீதியில் விஸ்வநாதன் மளிகை கடை அருகில் உள்ள பழைய மின்கம்பத்தில் புதிதாக மின்குழல் விளக்கு (டியூப் லைட்) அமைத்துத்தர இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.
- விவிசிஆர். நகர் 2வது லேஅவுட்-2- 4வது வீதியில் உள்ள பாலம் உடைந்து விட்டதால் புதிதாக பாலம் அமைத்துத்தர இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.
- விவிசிஆர். நகர் 2வது லேஅவுட்-2- 2வது வீதியில் புதிய ஆழ்குழாய் கிணறு 2000 லி. கொள்ளளவு கொண்ட தண்ணீர் தொட்டி வைத்து மின்மோட்டார் பொருத்தி 100 மீ. நீளத்தில் ¾ இன்ச் பிவிசி குழாய் அமைத்து பொது விநியோகம் செய்து தர இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.
- பாலுசாமி வீதியில் ஏற்கனவெ உள்ள ஆழ்குழாய் கிணற்றில் இருந்து மின்மோட்டார் பொருத்தி 2000 லி. கொள்ளளவு தொட்டி அமைத்து 50 மீ. நீளத்தில் பி.வி.சி.குழாய் மூலம் பொது விநியோகம் செய்ய இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.
- காமாட்சி காட்டில் உள்ள சாக்கடை இருபுறமும் பக்க சுவர் கட்டிக்கொடுக்க இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.
- அய்யனாரப்பன் கோயில் வீதியில் 1 அங்காளியம்மன்கோயில் அருகில் உள்ள ஆழ்குழாய் கிணற்று அருகே நீர்தொட்டி 2000 லி. அமைத்து பிவிசி குழாய் மூலம் 100 மீ. நீளத்திற்கு நீர்விநியோகம் செய்து தர இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

**340. 56வது வார்டு மாமன்ற உறுப்பினர் திரு. செ. முருகநாதன் அவர்கள் முன்மொழிய 57வது வார்டு மாமன்ற உறுப்பினர் திரு. எம். பிரபு அவர்கள் வழிமொழிய தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.**

**64. 59-வது மாமன்ற உறுப்பினர் திரு. கே.ஏ. குப்புசாமி அவர்களால் கொண்டுவரப்பட்ட தீர்மானம்.**

- அரசிளங்கோ வீதி, மரப்பாலம் மெயின் ரோடு, காளிங்கராயன் வாய்க்கால் விநாயகர் கோயில், மரப்பாலம் ரோடு-4 பகுதிகளில் தார்பேட்ச் அமைக்க இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.
- மரப்பாலம்-1வது வீதியிலிருந்து 10 வீதிகளுக்கும் நுழையும் இடத்தில் சிறுபாலம் அமைத்திட இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.
- மரப்பாலம் 1வது வீதி ஈஸ்வரி பிளாஸ்டிக் அருகே புதியதாக ஆழ்குழாய் கிணறு அமைத்து, மின்மோட்டார் பொருத்தி சின்டெக்ஸ் டேங்க் வைத்து வீதிகளுக்கு பைப் லைன் செய்து கொடுத்திட இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.
- 8வது வீதி தெற்கு பகுதி அஜீஸ்பாய் வீட்டருகே புதியதாக ஆழ்குழாய் கிணறு அமைத்து டேங்க் வைத்து மின்மோட்டார் பொருத்தி வீதிகளுக்கு பைப் லைன் அமைத்து தர இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.
- அரசிளங்கோ வீதியில் பெத்தன்னசாமி கோவில் அருகில் உள்ள போர்வெல் தண்ணீர், டேங்கில் இருந்து பைப்லைன் அமைத்து மதுரைவீரன் கோவில் சந்து பொன்னுசாமி விட்டு அருகிலும், அரசிளங்கோ வீதி, வெங்கட் வீடு அருகிலும், தங்கமணி வீட்டு அருகிலும் அமைத்துக் கொடுக்க இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.
- குமணன் வீதி டேங்கில் இருந்து அனைத்து சந்துகளுக்கும், வையாபுரி சந்திற்கும் போர்வெல் டேங்கிலிருந்து பைப்லைன் அமைத்துக் கொடுக்க இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

- அரசிளங்கோ வீதியும், சின்னமாரியம்மன் கோயில் வீதியும் சந்திக்கும் இடத்தில் உள்ள டேங்கிலிருந்து ஆறுமுகம் வீதி அன்புராஜ் வீட்டு அருகிலும், அரசிளங்கோ வீதியும் செங்குட்டுவன் வீதியும் சந்திக்கும் இடத்தில் பொன்னுசாமி வீட்டு அருகிலும் போர்வெல் டேங்கிலிருந்து பைப்லைன் அமைத்துக் கொடுக்க இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.
- மரப்பாலம் 1-வது வீதி ரேசன் கடை அருகில் உள்ள டேங்கில் இருந்து மீனாட்சி சுந்தரம் வீட்டுக்கருகில் போர்வெல் டேங்கிலிருந்து பைப்லைன் அமைத்துக் கொடுக்க இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.
- மரப்பாலம் மெயின் ரோட்டில் உள்ள டேங்கில் இருந்து கிருஷ்ணன் நாடார் வீட்டுக்கருகிலும், 2-வது வீதி சந்திக்கும் இடத்திலும் 1 இன்ச் பைப் லைன் அமைத்துத்தர இம்மாமன்றம் தீர்மானிக்கிறது

**341. 59வது வார்டு மாமன்ற உறுப்பினர் திரு. கே.ஏ.குப்புசாமி அவர்கள் முன்மொழிய 55வது வார்டு மாமன்ற உறுப்பினர் திரு. எம்.பி. சுப்பரமணி அவர்கள் வழிமொழிய தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.**

**65.** வட்டாட்சியர் சமூக பாதுகாப்புத் திட்டம், ஈரோடு அவர்களின் ந.க.எண். 1500/2011/S3 மற்றும் 8818/2010/S3 கடிதத்தில் 2037 நபர்களுக்கு இந்திரா காந்தி தேசிய முதியோர் ஓய்வூதியத் திட்ட பயனாளிகளுக்குரிய வறுமைக் கோட்டு எண் வழங்க கோரியுள்ளார். வறுமைக் கோட்டு பட்டியல் (BPL) எண் வழங்குவதற்கு மாமன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :

மாமன்றம் அனுமதி வழங்கலாம்

இ5-11948-2011

**342. அனுமதி வழங்கப்பட்டது.**

## வணக்கத்திற்குரிய மேயர் அவர்களால் கொண்டு வரப்படும் தீர்மானம்

66) ஈரோடு மாநகராட்சி 01.01.2008 முதல் மாநகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு, 25.10.2011-ந்தேதி முதல் நான்கு மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு வளர்ச்சிப் பணிகள் நடைபெற்று வருகின்றன. தற்போது இம்மாநகராட்சியில் மக்கள் தொடர்பு அலுவலர் பணியிடம் இல்லை. மாநகராட்சி சட்ட விதிகளின்படி மக்கள் தொடர்பு அலுவலர் பணியிடம் ஒன்று தோற்றுவிக்க அரசுக்கு முன்மொழிவுகள் அனுப்பலாம்.

**343. வணக்கத்துக்குரிய மேயர் அவர்களால் முன்மொழியப்பட்டு மரியாதைக்குரிய துணைமேயர் அவர்களால் வழிமொழியப்பட்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.**

**இடம்- ஈரோடு** — **மேயர்,**
**நாள்- .02.2012** — **ஈரோடு மாநகராட்சி**